விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 30 புதன்கிழமை (12.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 055

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ


# ஹயஸ் வான் கோர விபத்து

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலி

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டையிழந்த ஹ்யஸ் வான் மாங்குளம் பகுதியில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் மீது மோதி விபத்துக்குள்ளானதில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க...)


வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர்...


சின்னாபின்னமாகிய ஹயஸ்


சுஜிகரன் ஜஸ்மி (வயது - 7)


சுஜிகரன் பதுமன் (வயது - 4)

போர்க்குற்ற விசாரணைகளுக்கு

### ஐரோப்பிய ஒன்றியம் முழு ஆதரவு

போர்க்குற்றச்செயல் தொடர்பிலான விசாரணைகளுக்கு முழு அளவில் ஆதரவளிக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பிரஸல்சில் நேற்று நடைபெற்ற ஒன்றியத்தின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை 19ஆம் பக்கம் பார்க்க..

### 59ஆக அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி நேற்றுச் செவ்வாய்க்கிழமை மீண்டும் தோண்டப்பட்ட போது மேலும் ஒரு மனித எச்சம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு ஒரு தொகுதி மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராதபுர 19ஆம் பக்கம் பார்க்க..

### பல்வேறு அனர்த்தங்களில் 10 பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவங்கள் உட்பட அனர்த்தங்களினால் 10 பேர் உயிரிழந்துள்ள அதேவேளை 8 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இதில் யாழ்ப்பாணத்தில் யாழ் பலாலி இராணுவ முகாமில் மதில் உடைந்து வீழ்ந்ததில் சிக்குண்ட இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததோடு வீட்டில் உயிரிழந்தது கிடந்த நிலையில் 24 வயதான பெண்ணொருவரின் 19ஆம் பக்கம் பார்க்க..

### இரு பெண்கள் சடலமாக மீட்பு

தூக்கில் தொங்கிய குடும்பப் பெண் ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலன் இன்றி நேற்று இரவு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியை சேர்ந்த சிவகுமார் கலைச்செல்வி (வயது 43) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். 19ஆம் பக்கம் பார்க்க..

### பிக்கப் - மோ. சைக்கிள் விபத்து தாயும் மகளும் பரிதாப பலி



(யாழ்ப்பாணம்)

பிக்கப் மோதித் தள்ளியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற தாயும் மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்பிவிட்டு, விசுவமடு நோக்கி புறப்பட முயன்ற போது பரந்தனில் இருந்து கோழிகளை ஏற்றி வந்த மகேந்திரா பிக்கப் ரக வாகனமொன்று மோதிய 19ஆம் பக்கம் பார்க்க..

### மதில் வீழ்ந்ததில் சிப்பாய் உயிரிழப்பு

திடீரென உடைந்து வீழ்ந்த மதிலில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை யாழ். பலாலி படைத் தலைமையகத்தில் இடம்பெற்றதாகவும் இதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய 19ஆம் பக்கம் பார்க்க..

### தமிழர்களுக்கு தீர்வு கிடைக்க மூன்றாம் தரப்பு அவசியம்!

#### சுட்டிக்காட்டுகிறார் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்பு அவசியமாகவுள்ளது எனவும் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் தரவுகளைத்தர அரசாங்கத் திணைக்களங்கள் மறுத்து வருகின்றன எனவும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகம் ஹேறலியங் சூ மற்றும் இலங்கைக்கான ஐ.நாவின் பிரதிநிதி சுனைன் நந்தி ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

இவர்களுடனான சந்திப்பினையடுத்து வடக்கு முதலமைச்சர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

இதன்போது வடக்கு மாகாணத்தில் கடந்த காலப் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுக்கு தேவையான உதவிக் கோரிக் 20ஆம் பக்கம் பார்க்க..

### வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் கரிசனை அரசிடமில்லை

#### ஐ.நா. உதவிச் செயலரிடம் முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலப் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் வாழ்கைத்தரத்தை முன்னேற்றும் கரிசனை அரசாங்கத்திடமில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகததிடம் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகம் ஹோலியங் சூ மற்றும் இலங்கைக்கான ஐ.நாவின் பிரதிநிதி சுனைன் நந்தி உள்ளிட்டவர்கள் யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை வருகை தந்தனர்.

[illegible] யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

யாழ். கோவில் வீதியிலுள்ள வடக்கு முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் முதலமைச்சரை முற்பகல் சந்தித்து கலந்துரையாடிய ஐ.நா பிரதிநிதி 19ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கொழும்புக் கம்பன் விழா நாளை கோலாகலமாக ஆரம்பம்

## மலேசிய அமைச்சர் எம்.சரவணன் பங்கேற்பு

(கொழும்பு)

கொழும்புக்கம்பன்கழகம்நடத்தும் இவ்வாண்டுக்கான கம்பன விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள நாளை 13ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு வெள்ளவத்தை ஸ்ரீ ஐஸ்வர்ய லக்ஷ்மி திருக் கோவிலிருந்து கம்பன்பட ஊர்வலத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

மங்கல விளக்கேற்றலை திருகேதீச்சர ஆலய அறங்காவலர்சபைத் தலைவர் வி.கைலாசபிள்ளை தம்பதியர் நிகழ்த்தி வைக்க கடவுள வாழ்த்தினை ரி.கருணாகரன் இசைக்கவுள்ளார்.

வரவேற்புரையினை, கொழும்பு கம்பன்கழக தலைவர் தெ.ஈஸ்வரன் ஆற்றுவார். தொடர்ந்து யாழ் மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும், கொழும்புக்கம்பன்கழகப்பெருந் தலைவருமான ஜெ.விஸ்வநாதன தலைமையுரையையும், மலேசிய இளைஞர், விளையாட்டுத்துறையின்துணை அமைச்சர் டத்தோ எம்.சரவணன் தொடக்கவுரையையும் ஆற்றவுள்ளனர். தொடர்ந்து அருணாசலக்கவிராயர் எழுதிய புகழ்பெற்ற 'இராமநாடகக் கீர்த்தனை' எனும் நூலும், கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் கம்பனோடு கால் நூற்றாண்டு (பாகம் 1) எனும் நூலும் வெளியிடப்படவுள்ளன.

தொடர்ந்து, கடந்த 2013ஆம் ஆண்டுக் கம்பன் விழா நிகழ்ச்சிகளின் இறுவட்டுகளும் வெளியிடப்படவுள்ளன. இவற்றின் முதற் பிரதிகளை முறையே இலக்கியப்புர வலர் ஹாசிம உமர், தினக்குரல் ஸ்தாபகர் எஸ்பி சாமி, தொழிலதிபர் எம்.மாணிக்க வாசகம்ஆகியோர்பெற்றுக்கொள்கின்றனர். வழமைபோல் இவ்வருடமும் கம்பன் கழகத்தினால் சமுதாயப் பணிக்காக வழங்கப்பெறும் அமரர் ஏ.எல்.அலமேலு ஆச்சி நினைவு நிதியுதவியான ரூபாய் ஐம்பதாயிரத்தினை மட்டக்களப்பு யோகர்சுவாமி மகளிர் இல்லத்தினர் பெற்றுக்கொள்கின்றனர்.

தொடர்ந்து, என்.கருணை யானந்தன் நிறுவிய "நாவலர்" விருதினை பேராசிரியர் இரா.செல்வக்கணபதி (தமிழ்நாடு) அவர்களும், திருக்குவளை வை.இராமஸ்ரீநிவாசன் மங்கையர்க்கரசி அறக்கட்டளை நிறுவிய "விபுலானந்தர்" விருதினை சங்கத்பூஷணம் சு.கணபதிப்பிள்ளை அவர்களும்பெற்றுக் கொள்கின்றனர்.

"கவிக்கோ" அப்துல் ரகுமான் நிறுவிய "மகரந்தச் சிறகு" விருதினைக் கவிஞர் சோலைக்கிளியும் அமரர் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் நினைவாக அவரது குடும்பத்தினர் நிறுவியுள்ள "நுழைபுலம்" ஆய்வு விருதை 'திருக்குறளும் முகாமைத்துவமும்' எனும் ஆய்வு நூலுக்காக ஆய்வாளர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் பேராசிரியர் சாலமன் பாப்பையா நிறுவிய "ஏற்றமிகு இளைஞர் விருதினை" விரிவுரையாளர் அ.ஆரூரன் (இசைத்துறை) அவர்களும் பெற்றுக் கொள்கின்றனர்.

தொடரும் பரிசளிப்பு அரங்கில், அமரர்துரை. விஸ்வநாதன்நினைவுப் பேச்சுப் போட்டியிலும் அமரர் பொன். பாலசுந்தரம் நினைவுக் கவிதைப் போட்டியிலும் வெற்றியீட்டி யோருக்கான தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கப்பரிசில்கள்வழங்கப்படவுள்ளன.

தொடக்க நாளின் நிறைவு நிகழவாக "நாட்டியவேள்வி" நடன நிகழ்ச்சி 'இரணியன்வதை' எனும் தலைப்பில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியினை வழங்கு வதற்காக தமிழ் நாட்டிலிருந்து புகழ்பெற்ற நடனக் கலைஞர் கலைமாமணி நர்த்தகி நடராஜ் தமது அணிசெய் கலைஞர்களுடன் வருகை தந்துள்ளார். (ந)

# வீடுகளை இராணுவம் விடுவித்தபோதும் அங்கு குடியிருக்க அனுமதியில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் பிடியிலிருந்த பொதுமக்களின் வீடுகள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் தமது வீடுகளில் குடியேற முடியாமல் இராணுவத்தினர் மீண்டும் தடையாகவுள்ளதாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமது வீடுகளினை தம்மிடம் மீண்டும் ஒப்படைப்பதை ஒரு விழாவாக நடத்துவதற்காகவே இராணுவத்தினர் தமது வீடுகளில் தம்மை குடியேற விடாது தடுத்து வருகின்றனர் எனவும் அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், யுத்த காலத்தின் போது எமது சொந்த வீடுகளினை இராணுவத்தினர் தமது முகாம்களாக பயன்படுத்தி வந்தனர். தற்போது எமது வீடுகளினை விடுத்து இராணுவத்தினர்வெளியேறியுள்ளதோடு விடுவிக்கப்பட்ட எமது வீடுகளையும் சென்று பார்வையிட அனுமதியளித்துள்ளனர்.

குறிப்பாக சாவகச்சேரி அதனையண்டிய மற்றும் பல இடங்களில் விடுவிக்கப்பட்டிருந்தன. இவ் வீடுகளை பார்வையிட மட்டுமே இராணுவம் அனுமதித்துள்ளது.

வீட்டை சுற்றி வேலி அடைப்பதற்கு கூட அனுமதிக்கவில்லை எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எமது வீடுகளினை எம்மிடமே உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்நிகழ்விலேயே எமது வீடுகளினை நாம் பயன்படுத்துவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்குவர் எனவும் அம்மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந் நிகழ்வில் வைத்து வழங்குவதற்காக எமது காணிஉறுதிகளினை கூட மீளப் பெறப்பட்டு அந்த நிகழ்வில் வைத்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

எமது வீட்டில் வாடகை கூட இல்லாமல் குடி இருந்தவர்கள் எமக்கே நிகழ்வு வைத்து வழங்கப்படுவது வேடிக்கையாகவுள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்ற னர்.

இது தொடர்பான அறிவித்தல்கள் யாழ்.மாவட்ட செயலகத்திற் கும் சென்றுள்ளதாக அறிய முடிகின்றது. (அ-4)

# மலர் வெளியீடு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி முள்ளியான் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நூல் வெளியீடு இன்று காலை 10.30க்கு ஆலய மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

**செல்வவிநாயகர் திருவருள** என்ற நூல வெளியீட்டு விழா ஆலய தர்மகர்த்தா வை.வீரகத்திபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த சுவாமிகள், சிவஸ்ரீ கனக சிவகுமார குருககள, சிவஸ்ரீ ரத்னபால கிருஷண குருககள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து நூலின் முதற்பிரதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பெற்றுக்கொள்ள நூலின் வெளியீட்டுரையை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி கலாநிதி செல்வி தி.நல்லையா, நயபடுரையை நெல்லியடி ம.மி.த.க. பாடசாலை அதிபர்நடராஜா தேவராஜா, சிறப்புரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ-9,64)

# இராணுவ மயம் !

(கொழும்பு)

இலங்கையில் தற்போது அனைத்துமே இராணுவ மயமாகி விட்டதாக இந்திய இராணுவத்தின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான கேணல் ஆர்.ஹரிகரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

சென்னை, அடையாறில் உள்ள இந்திய - தெற்காசிய ஆய்வு மையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கேணல் ஆர்.ஹரிகரன் உரையாற்றினார்.

இதன்போதே அவர் தற்போது இலங்கையில், அனைத்தும் இராணுவ மயமாகிவிட்டதாக குறிப்பிட்டார். (செ-11)


## வீடு விற்பனைக்கு

இல. 22/01, 3-ம் ஒழுங்கை (பொன்னம்பலம் வீதி) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒரு பரப்பு காணி வீடு, கிணறு வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: (இ)

0775487486, 0212052741


# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயதின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் கல்லூரி அதிபர் ஜெ.எ.தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வலம்புரி பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் எஸ்.வெற்றிவேலாயுதம் கலந்து கொள்ளவுள்ளார். (செ-11)


## நிரந்தர தொழில் வாய்ப்பு

17-50 வயது ஆண்-பெண் இருபாலாருக்கும் எம்மிடம் தொழில் வாய்ப்பு சம் பளம் 18000/=, 25000/= , 32000/= உணவு + தங்குமிடம் குறைந்த விலைகளில் நிரந்தர தொழில். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ கோடியல்/ ரப்பா/ பிளாஸ்ரிக்/ காமெண்ட்/ தண்ணீர் போத்தல்/சோசஜஸ்/டயில்/தேயிலை மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி லேபல் + தரம்பிரித்தல் களஞ்சியப்பிரிவிற்கு ஆட்சேகரிப்பு வருகை தரம் நாளிலே வேலைவாய்ப்பு (நண்பர்கள்/குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில்)

தொடர்பு:-0775561883

(சி-6477)



## JAFFNA COLLEGE

### Inter-House Athletic Meet - 2014

Chief Guests:

**Mr. K. Sathiyapalan**
(Deputy Director of Education, Provincial Department of Education, Northern Province)

&

**Mrs. Geetha Sathiyapalan**
(Teacher, Jaffna St. John Bossco Vid.)

Venue: Bicknell Grounds
Date: Thursday 13th February 2014
Time: 2.00 p.m.

*Alumni, Parents, Friends and well wishers are cordially invited.*

Jaffna College
Vaddukoddai.

Principal



## கண்ணீர் அஞ்சலி

### சிவகுமார் புவனமலர்



யாழ்.அச்சுவேலி இடைக்காட்டைப்பிறப்பிடமாகவும், வட்டக்கட்சியை வசிப்பிடமாகவும் ஜேர்மனி Essen ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவகுமார் புவனமலர் அவர்கள் 05.02.2014 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி பர்வதசக்தி விமலேஸ்வரன் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி.

(C-6487)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமஸ்கிருத வகுப்புக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் சமஸ்கிருத மொழி வகுப்பினை யாழ்ப் பாண மாவட்டத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு களைச் செய்துள்ளதாக பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

இவ் வகுப்புக்கள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் சனிக்கிழமை, ஞாயிற் றுக்கிழமைகளில் தொடர்ந்து 3 மாதங்கள் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை பருத் தித்துறை ஆனைப்பந்தி குருகுலமண்டபத் தில் நடைபெறும்.


இப் பயிலரங்கில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தமது பெயர் விபரங்களை 011 255 2641 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது 011 255 2825 என்ற தொலைநகல் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள விரும் புவர்கள் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248/1, காலி வீதி, கொழும்பு-04 என்னும் முகவரிக்கு கடிதம் அனு ப்புவதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "சமஸ்கிருத மொழி வகுப்பு-2014" என இடப் படுதல் வேண்டும்.

இவ் வகுப்புகளில் பயில்வதற்கு எவ்வித வயதெல்லையும் கட்டணமும் இல்லை. எனவே, ஆர்வமுள்ளோர் இவ் வகுப்புகளில் கலந்து கொண்டு பயன்பெறலாம் எனத் திணைக் களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப் பிடப்பட்டுள்ளது. (அ)

நன்றி: ஐலண்ட்




# வைத்தியசாலை சிற்றூழியர்கள் நேற்று அரைநாள் பணிப்புறக்கணிப்பு


யாழ்ப்பாணம்


மந்திகை


சாவகச்சேரி

(யாழ்ப்பாணம்)

ஏழு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து மத்திய மற்றும் மாகாண சபைகளுக்குட்பட்ட வைத்தியசாலைகளில் பணிபுரிந்து வரும் சிற்றூழியர்கள் நேற்று நாடளாவிய ரீதியில் அரைநாள் பணிப்புறக்கணிப்பு போராட் டத்தில் ஈடுபட்டனர்.

. காலை 7 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டம் நண்பகல் 12 மணி வரை இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் பங்கு கொண்டிருந்த வைத்தி யசாலை சிற்றூழியர்கள் தமது கைகளில் எதிர்ப்பு சுலோகங்களையும் தாங்கியிருந்த னர்.

இதேவேளை மேற்படி போராட்டம் குறித்து ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது,

திறைசேரி செயலாளரின் சிபாரிசின் படி உரிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு விதிமுறைகள் 2012.12.14 ஆம் திகதி அர சாங்க சேவை ஆணைக்குழு அனுமதியளித் திருந்தாலும் 7 வருடங்களாக உரிய சம் பளமும் பதவி உயர்வும் வழங்குவது குறித்து எதுவித ஆர்வமும் காட்டவில்லை. இந் நிலை யால் இளைப்பாறியவர்களுக்கும் நட்டமே நேர்ந்துள்ளது.

இந்த சுற்றறிக்கையையும் சிபாரிசுகளை யும் சுகாதார திணைக்களத்தின் அதிகாரிகள் அமுல்படுத்தாமையினால் 6/2006 சுற்ற றிக்கையை வெளியிட்ட பின் இளைப்பாறிய 55-60 வயது வரை கடமையாற்றி இளைப் பாறியவர்களுக்கும் இந்த சம்பளம் கிடைக் காமையினால் நட்டம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: 20/2001 மற்றும் 2011.09.12 ஆம் திகதியின் படி 2011.09.11 ஆம் திகதிக்கு 45 வயதை தாண்டியவர்களை எதுவித தரப்படுத்தல்களு மின்றி நேரடியாக உரிய சம்பள அளவு கோலில் வைத்தல்

மேற்போந்த உறுப்புரை அமுல்படுத் தாமை காரணமாக அன்றாடம் சேவையின் தேவைகளுக்கேற்ப சேவையை பெறுபவர் களுக்கு உரிய முன்னைய கடமையாற்றிய நேரத்திற்கு ஏற்ப மேலதிக நேரக் கொடுப் பனவு, அரசாங்க பகிரங்க விடுமுறைக் கொடுப் பனவு, வாராந்த ஓய்வு நாள் கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை.

இந் நிலையினுள், மீண்டும் ஒரு சுற்றி னால் எமக்கு 6/2006 சுற்றறிக்கையில் கிடைக்க வேண்டிய உரிமைகள் உள்ளிட்ட தற்போது அமுல்படுத்தப்பட வேண்டிய ஏனைய சுற்றறிக்கைகளை அமுல்படுத்துமாறும், சகல தற்காலிக மற்றும் அமைய ஊழிய ர்களை நிரந்தரமாக்குமாறும், மேலதிக நேரக் கடமைக்கான உரிய மேலதிக நேரக் கொடு ப்பனவை வழங்குமாறும், சீருடைக் கொடுப்ப னவை ஒரே தடவையில் வழங்குமாறும், 5 நாட்களைக் கொண்ட வேலை வாரத்தை அமுல் படுத்துமாறும், அபாய கொடுப் பனவை அதி கரிக்குமாறும், முறையற்ற பதில் கடமை நியமனம் வழங்குவதை உடனடியாக கைவி டுமாறும் கோரப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தின் பழைய அனு பவம் நிறைந்த எமது சங்கம் மக்கள் நலனுக் காகவும் ஊழியர் நலனுக்காகவும் அர்ப்பணிப் புடன் செயற்பட்டு திணைக்களத்தின் பொது வான விதிமுறைகளைப் பின்பற்றி வரப்பிர சாதங்களையும் அனுசரணைகளையும் பெற்றுக் கொள்வது தொடர்பாக அனுபவம் நிறைந்த எம க்கு இந்நிலையினுள் மௌனம் காக்க முடியாது.

நிர்வாகிகள் எமது பிரச்சினைகள் தொடர் பாக காட்டுகின்ற சோம்பல்தனத்தை போக்கிக் கொள்வதற்கான காலம் வந்துள்ளது. எமது சங்கம் சிற்றூழியர்களின் பிரச்சினைகள் குறித்து எவ்வளவு காலம் பொறுமை சாதித்தது என்பதை மேற்காட்டப்பட்டுள்ள தினங்களிலி ருந்து தெளிவாகின்றது.

எந்த விதத்திலும் இன்று எமக்குக் கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு சீவிக்க முடியாதுள் ளது. எமது பிள்ளைகளை பராமரிக்க நாம் மிகப் பெரிய துன்பத்தை அனுபவிக்கின் றோம்.

எமது வைத்தியசாலைக்கு வருகைதரும் நோயாளிகளான உங்களுக்கும் வாழ்க்கை தொடர்பான சிக்கல்கள் எம்மைப் போலவே சமமாக உணர்கிறீர்கள் என நினைக்கின் றோம்.

அதனால் உங்களுக்கு எப்போதும் ஒத்து ழைப்பை வழங்கும் எம்மைப் பற்றி தங்களின் கவனத்தை செலுத்தி எமது இந்தச் சமருக்கு ஒத்துழைப்பை வழங்குவீர்களென நாம் எதிர் பார்க்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(அ-6-19-24-29-64-266)




## தலைமைத்துவப் பயிற்சிக்கு செல்லும் மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களினதும் மற்றும் கல்விசார் அமைப்புக்களினதும் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணத்திலிருந்து மின்னேரியாவுக்கு தலைமைத்துவப் பயிற்சிக்கு செல்லும் மாண வர்களுக்கான விசேட பேருந்து சேவை எதிர் வரும் 15ஆம் திகதி காலை 6 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து விசேட சேவைகளாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பேருந்து சேவைக்கான முன்பதிவு களை யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் மேற் கொள்ளலாம் என யாழ்.சாலையின் முகா மையாளர் செ.குலபாலச்செல்வம் அறிவித் துள்ளார். (அ)

# பாடசாலையை விட்டு இடை விலகிய 12 மாணவர்கள் மீள இணைக்கப்பட்டனர்

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகர்பிரிவில் பாடசாலை செல்லாத நிலையில் 12 மாணவர்கள் காக்கைதீவு மற்றும் முள்ளி ஆகிய கிராமங்களில் இனங்காணப்பட்டுள்ளனர்.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் ஆலோசனைக்கேற்ப பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் மா.பத்மராஜ் தலைமையில் நேற்றுமுன்தினம் குழுவினரே மேற்படி மாணவர்களை இனங் கண்டுள்ளனர்.

இவர்களில் சகலரும் 12-16 வயதிற்கும் இடைப் பட்டவர்களாகவுள்ளதோடு இவர்களில் இருவர் வாகனத் திருத்தத்தில் வேலை செய்து கொண் டிருந்த நிலையிலும் ஏனையவர்களில் இருவர் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையிலும் மற்றும் இருவர் மீன் வியாபாரத் தில் ஈடுபட்டிருந்த நிலையிலும் ஏனையவர்க ள் வீதியில் அலைந்து திரிந்த நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனை வரும் ஆனைக்கோட்டை பகுதியிலுள்ள பாடசா லைகளைச் சேர்ந்த மாணவர்களாகவுள் ளனர்.

இம் மாணவர்களில் ஆசிரியர் வழங்கிய வீட்டு வேலைகளை செய்யாமை காரணமாக ஆசிரியரினால் தண்டிக்கப்பட்டமையாலும் சிலர் பாடசாலை இல்லமெய்வன்மைப் போட் டிக்குப் பணம் செலுத்த முடியாமையாலும் பாட சாலைக்கு செல்லவில்லையெனத் தெரிவித் ததுடன் இவர்களுக்கான அனைத்து பிரச்சினை களும் தீர்க்கப்பட்டு அந்தந்த பாடசாலைகளில் மீள இணைக்கப்பட்டு மாணவர்களுக்கு தேவை யான கற்றல் உபகரணப் பொதிகளும் வழங் கப்பட்டுள்ளன. இத் திடீர் பரிசோதனையில் கிராம சேவகர் நிஷாந்தன், பொருளாதார அபிவிரு த்தி உத்தியோகத்தர்கள், மானிப்பாய் பொலிஸ் நிலை யத்தைச் சேர்ந்த பொலிஸார் குறித்த பகுதியிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர் கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக குழுவினரால் மேற்கொள்ளப்படும் 2 ஆவது திடீர் பரிசோதனை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (அ-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சங்கீத ரசனை

"திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை ஒரு தோடி வாசிக்க வேண்டும், அதை நாள் முழுவதும் நான் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும், அதைவிடப் பெரிய ஆனந்தம் எனக்கு வேறு எதுவும் இல்லை!" என்று சொல்லுவார் ஒருவர்.

அவருக்கு சங்கீதத்தைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது. இருந்தாலும் ஆனந்தமாக அதை ரசிக்கத் தெரியும்.

இது எப்படி?

சங்கீதத்தைப்பற்றி நுணுக்கமாக எதுவும் தெரிந்து கொள்ளாமல் சங்கீதத்தை ஒருவர் ரசிக்க முடியுமா?

இந்தக் கேள்விக்கு திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளையே பதில் சொல்லியிருக்கிறார். ஒரு முப்பது வருடத்திற்கு முன்னால் எடுக்கப்பட்ட வானொலி பேட்டியிலே(16-5-61)

ரசிகர்களை இரண்டு வகையாக பிரிக்கலாம் என்றார் அவர். சங்கீத இலட்சணத்தை தெரிந்து குற்றம் குறைகளை ஆராய்ந்து விவகாரத்தோடு ரசிக்கிறவர்கள் ஒரு ரகம். இலட்சண சுத்தத்திலே இவர்கள் நோட்டம் அதிகமாக இருக்கும். குற்றம் எங்கே வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டே இருப்பார்கள். குற்றம் வராதா என்று எதிர் பார்க்கிறவர்களும் உண்டு. அவர்களெல்லாம் லட்சண ஞானஸ்தானம்.

இன்னொரு ரகம் இலட்சிய ஞானஸ்தானர்கள்.

இலட்சிய ஞானமா ரசிக்கிற ஜனங்கள்தான் அதிகம். இலட்சிய ஞானமுள்ள ரசிகர்கள் சுலபமாய் புரிஞ்சுகொண்டு ஆனந்தப்படுகின்ற மாதிரி வாசிக்க வேண்டும் என்று ராஜரத்தினம் பிள்ளை கூறியுள்ளார்.

ஒரு தடவை திருச்சி மலைக்கோட்டையிலே கும்பாபிஷேகம் நடந்துகொண்டிருந்தது. சுவாமி புறப்பாடு ஊர்வலம் நடந்து கொண்டிருக்கிறது!

மதுரை நாதஸ்வர வித்துவான் பொன்னுசாமிப்பிள்ளை வாசித்துக் கொண்டிருக்கிருக்கிறார்.

நாட்டை மல்லாரி எல்லாம் வாசித்து முடித்தவுடனே இராக ஆலாபனையை ஆரம்பித்தார்.

ஒரு முக்கியமான இடத்திலே...

"பலே!" என்று ஒரு குரல் ஒலித்தது.

அந்தப்பாராட்டு எங்கே இருந்து வந்தது என்று நினைக்கிறீர்கள்?

கியாஸ்லைட் தூக்கிக்கொண்டிருந்த கூலிக்கு வேலை செய்யும் ஒருவர் தான் அப்படி சபாஷ் போட்டார்.

பல ஊர்களிலே கியாஸ்லைட் தூக்கிறபோது நாதஸ்வரம் கேட்டுக் கேட்டு அந்த ரசிகர் அந்த அளவுக்கு ஞானம் அடைந்திருக்கிறார். அவர் தான் இலட்சிய ஞானஸ்தர். அதை நினைக்க நினைக்க நமக்குச் சந்தோஷம் பொங்குகிறது என்று ராஜரத்தினம்பிள்ளை கூறினார்.

இலட்சண ஞானஸ்தராக இருந்தாலும் சரி... இலட்சிய ஞானஸ்தராக இருந்தாலும் சரி... சங்கீதத்திலேயிருந்து ரசிகர்கள் எதிர்பார்க்கிறது இனிமை-சௌக்கியம்-கமகம்-இன்பம்-சுகம் இதுதான் என்கிறது அவருடைய கருத்து.

அப்பேற்பட்ட நாதஸ்வரச் சக்கரவர்த்தி காலமாகிவிட்டார் என்று கேள்விப்பட்டவுடனே கவிஞர் கண்ணதாசன் மிகவும் கலங்கிப் போனார். ஓர் இரக்கற்பாவும் பாடினார்.

"செவியினில் ஓடி எங்கள்
சிந்தையில் ஓடி இந்தப்
புவியெல்லாம் ஓடி நின்பால்
பொங்கிய தோடி வேறிங்கு
எவரிடம் போகும்?"
என்று கேட்டார்.
வேறு எங்கேயும் போகவில்லை!
ரசிகர்கள் நெஞ்சிலே எல்லாம் பதிவாயிருக்கிறது.

அது எல்லாம் இருக்கட்டும். இப்போது என்னோட கதைக்கு வருகிறேன்.

நான் ஒரு சமயம் ஒரு சங்கீதக் கச்சேரிக்குப் போயிருந்தேன். எனது நண்பர் ஒருவர் அங்கே வந்திருந்தார். அவர் சங்கீத நுணுக்கம் எல்லாம் தெரிந்தவர். அவர் என்னைப் பார்த்து "நீங்கள் என்ன லட்சண ஞானஸ்தரா? இலட்சிய ஞானஸ்தரா?" என்று கேட்டார். "அதை நீங்களே முடிவு செய்யுங்கள்!" என்றேன் மிகவும் தன்னடக்கமாக!

அப்படி என்றால் நான் ஒரு கேள்வி கேட்கின்றேன் பதில் சொல்லுங்கள். "இந்தக் கச்சேரி எப்படி இருக்கிறது? உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று கேட்டார்."

"அருமையாக அந்த வித்துவான் நாதஸ்வரம் வாசிக்கிறார்?" என்றேன்.

"போதும் நிறுத்துங்கள்!" என்றார்.

"ஏன்?" என்று கேட்டேன்.

"அவர் வாசிக்கிறது நாதஸ்வரம் இல்லை! கிளாரினெட்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நளினிக்கு விடுமுறை வழங்க முடியாது; சிறைத்துறை அதிகாரி பதில் மனுத்தாக்கல்

தந்தையின் உடல் நலத்தை காரணமாக கூறி ஒரு மாத கால விடுப்பு கோர ஆயுள் தண்டனை கைதி நளினிக்கு உரிமை இல்லை. எனவே நளினிக்கு ஒரு மாதகால விடுப்பு (பரோல்) வழங்க ஆட்சேபனை தெரிவித்து சிறைத்துறை நன்னடத்தை அதிகாரி உயர்நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினி உயர்நீதிமன்றில் ஒரு மனுத் தாக்கல் செய்தார்.

அம் மனுவில் தன்னுடைய தந்தை ஓய்வுபெற்ற சப் இன்ஸ்பெக்டர் சங்கர நாராயணன் 95 வயதில் மரணப் படுக்கையில் படுத்து இருப்பதாகவும் அவரது இறுதிக் காலத்தில் அவருடன் இருக்க விரும்புவதாகவும் அதற்காக தனக்கு ஒரு மாதம் விடுப்பு (பரோல்) வழங்க சிறைத்துறை கண்காணிப்பாளருக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

இந்த வழக்கு, நீதிபதிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது வேலூர் மத்திய சிறை கண்காணிப்பாளர் கருப்பண்ணன் பதில் மனுத்தாக்கல் செய்தார்.

அதில் கூறியிருப்பதாவது,

நளினியின் தந்தை சங்கர நாராயணன் ஆரோக்கியமான சூழ நிலையிலுள்ளார்.

விக்கிரமசிங்கபுரம் மலைப்பகுதி என்பதாலும் பாராளுமன்றத்துக்கு தேர்தல் வருவதாலும் நளினி அங்கு வசிப்பது சாதகமான சூழநிலை இல்லை என்றும் அவ்வாறு அவர் அங்கு வசிக்கும் போது தேர்தல் பயனுக்காக அரசியல் தலைவர்கள்அவரை சந்தி க்கலாம் என்றும் அவரால் வேறு விதமாக பிரச்சினைகள் உருவாகலாம் என்றும் விக்கிரமசிங்கபுரம் பொலிஸ் இனஸ்பெக்டர் ஆட்சேபனை தெரிவித்து அறிக்கை அனுபபியுள்ளார.

மேலும் நளினிக்கு ஒரு மாதம விடுப்பு வழங்க ஆட்சேபனை தெரிவித்து சிறைத்துறை நன்னடத்தை அதிகாரியும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

தந்தையின் உடல் நலத்தை காரணமாக கூறி ஒரு மாதம் விடுப்பு கோர ஆயுள் தணடனை கைதி நளினிக்கு உரிமை இல்லை. அவர் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையில் தண்டனை பெற்று உள்ளவர். எனவே அவரது மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது. இதையடுத்து இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 17 ஆம திகதிக்கு ஒத்திவைத்தார். (அ-2)

# சரத் பொன்சேகா தோற்பார் என்பதை அறிந்திருந்தோம்

## இப்படி கூறுகிறார் அனுரகுமார

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா தோல்வியடைவார் என்பதை தமது கட்சி முன்கூட்டியே அறிந்திருந்ததாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஆங்கில இணையத்தளம் ஒன்று வழங்கிய நேர்காணலில் அவர் இந்த தகவலை முதன் முதலில் வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற சில தினங்களுக்கு முன்னர், நுவரெலியாவில் நடந்த பொதுக் கூட்டத்தின் பின்னர் பொன்சேகா தேர்தலில் தோல்வியடைவார் என்பதை நான், பொன்சேகா உள்ளிட்டவர்களுக்கு தெரியப்படுத்தினேன்.

அன்று நாட்டில் ஏற்பட்டிருந்த நிலைமை குறித்து எமக்கு தெளிவான நிலைப்பாடு இருந்தது. கம்பளை பொதுக் கூட்டம் முடிந்த பின்னர் நுவரெலியாவில் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

அதில் ஜெனரல் சரத் பொன்சேகா, ரணில் விக்ரமசிங்க, விஜித ஹேரத், நான் உட்பட கலந்து கொண்டோம். ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் தோற்போம் என்று அப்போது கூறினோம். அத்துடன் உரிய முறையிலான அமைப்பு மற்றும் திட்டங்களை வகுத்தால் வெற்றிப்பெற முடியும் என்றும் நாங்கள் கூறினோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 60 | 90 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 40 | 40 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 30 |
| கோவா | 50 | 40 | 50 |
| கரட் | 60 | 80 | 100 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 80 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 60-80 | 90 | 80 |
| பாகற்காய் | 80 | 130 | 140 |
| வெண்டிக்காய் | 70 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 50 |
| பயற்றங்காய் | 160 | 150 | 100 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 30 | 70 | 50 |
| கறிமிளகாய் | 100 | 150 | 100 |
| முருங்கைக்காய் | 300 | — | 480 |
| போஞ்சி | 40 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 30-40 |
| இரோசவள்ளி | [illegible] | 70 | 100 |

# இராசி பலன்

*12.02.2014*
*(தை 30, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு*
*திரயோதசி பின்னிரவு 02.18 மணிவரை*
*புநர்பூசம் முன்னிரவு 08.59 மணிவரை*
*இராகுகாலம் 12.34-02.04 மணிவரை*
*சுபநேரம் 05.04-06.34 மணிவரை*
*பிரதோச விரதம்*

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், உடன் பிறப்புக்கள் உங்களிடம் மகிழும் செய்திகளை கொண்டு வந்து சேர்ப்பர்.

**மிதுனம்** நா வன்மையால் நற்பெயர் எடுப்பீர்கள், சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் மேலோங்கும், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், போசன சுகமுண்டு, பயணத்தால் பலன் கிடைக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும், சிந்தனை மிகுதியான நாள்.

**சிங்கம்** உறவினரைக் காண பயணமொன்றை மேற்கொள்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், உணர்ச்சி வசப்படும் சூழ்நிலைகள் ஏற்படலாம்

**கன்னி** யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவம் ஒன்று நடைபெறும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, புகழ்கூடும்.

**துலாம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், குடும்பத்தாரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தந்தை வழி உறவில் அனுகூலமுண்டு, பயணங்கள் கைகூடும்.

**தனுசு** மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குற்றம் கண்டுபிடிக்கலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** நினைத்த காரியங்கள் நிறைவேறும் நாள், நட்பு வட்டம் விரிவடையும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கை யானை வழிபட வேண்டிய நாள், கடன்பிரச்சினைகளை சுமுகமாக பேசி சமாளிப்பீர்கள், தேகாரோக்கியம் சீராகும்.

**மீனம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் யார் பிரதமரானாலும் இலங்கையின் கொள்கை மாற்றமுறாது

## ராவணாசக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் பிரதமராக மன்மோகன்சிங் பதவியில் இருந்தாலும் மோடி பிரதமர் பதவிக்கு வந்தாலும் எமக்கு பிரச்சினையில்லை.

அவர் களுக்காக இலங்கையின் கொள்கைகளை மாற்ற வேண் டிய அவசியமும் இல்லை. அடி பணியத்தேவையும் இல்லை என ராவணா சக்தி அமை ப்பின் தலைவர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரி வித்துள்ளார்.

ஜெனீவா விடயத்தை கையாள முடியாவிட்டால் அமைச்சர் பீரிஸ் பதவி விலக வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இறைமையுள்ள நாடு. இந்தியா எமது அயல் நாடு என்பதால் அதனோடு நட்புறவை பேணி வருகின்றோம்.

ஆனால் இந்தியாவுக்கு அடிபணிய வேண்டிய தேவை எமக்கு கிடையாது. அந் நாட்டின் பிரதமராக மன்மோகன் சிங்கிற்காகவோ அல்லது எதிர்காலத்தில் மோடி பிரதமராக பதவிக்கு வந்தாலோ எமக்கு பிரச்சினையில்லை.

அவர்களுக்காக இலங்கையின் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவையும் கிடையாது. எமது நாட்டுக்கு ஏற்றவாறே எமது கொள்கைகள் வகுக்கப்படும்.

இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ள பெரும்பாலானோர் இராஜதந்திர அறிவில்லாத அரசியலிலும், அரச சேவையிலும் ஓய்வு பெற்றவர்களாகவே உள்ளனர்.

இவர்கள் நாட்டுக்காக எதனையும் செய்வதில்லை. ஜெனீவா பிரச்சினை தொடர்பாகவும், ஆக்கபூர்வமான எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுத்ததில்லை.

மாறாக தமது பிள்ளைகளை வெளிநாட்டு பாடசாலைகளில் சேர்த்து விட்டு குடித்து கும்மாளம் அடித்து சுகபோகமாக வாழ்கின்றனர்.

எனவே, இவ்வாறானவர்களை தூதுவர் பதவியிலிருந்து வெளியேற்ற வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அவர் எதனையும் இதுவரையில் மேற்கொண்டதில்லை.

ஜனாதிபதியே இப் பதவிகளை வழங்கியிருக்கின்றார் என்றால் அப் பதவிகளில் உள்ளோரின் பலவீனங்களை ஜனாதிபதிக்கு தெரிவித்து பிரச்சினைக்கு முடிவு கட்டியிருக்க வேண்டும்.

ஆனால் அமைச்சர் பீரிஸ் இதனையும் செய்ய வில்லை.

அன்றாடம் ஏதோவொரு நாட்டுகது விஜயத்தை மேற்கொள்கின்றார்.

எத்தனை பயணங்களை மேற் கொண்டாலும் ஜெனீவா பிரச்சினைக்கு முகம்கொடுத்து வெற்றி பெறும எதுவும்நடக்க வில்லை.

எனவே வெளிநாட்டலுவல்கள் அமைச்சராக பீரிஸ் பதவி வகிப்பதில் எதுவித மானபிரயோசனமும் இல்லை.

இவ்வாறு தொடர்ந்து பதவியில் தொற்றிக் கொண்டிருக்காமல் இராஜினாமா செய்து வெளியேற வேண்டும் என்றும் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

(அ-2)

# லூர்து அன்னை திருத்தல விழா

(யாழ்ப்பாணம்)

மாதகல் தூயலூர்து அன்னையின் 75 ஆவது ஆண்டு நிறைவின் பவளவிழா யூபிலி பெருவிழாவாக கொண்டாப் படவுள்ளது.

இதற்கான முன்னாயத்த வழிபாடுகள் கடந்த 7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாட்கள் தினமும் மாலை 4.45 மணிக்கு நடைபெற்று வருகிறது.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு அன்னையின் திருச்சுரூப தேர்ப் பவனியும் நற்கருணை வழிபாடும் நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலை மையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(அ-2)

# நவசமசமாஜ கட்சியின் வேட்பு மனுவில் போலியான பெயர்கள் உள்ளடக்கம்

நவசமசமாஜ கட்சியின் வேட்புமனுவில் போலியான வேட்பாளர்களின் பெயர் இடம் பெற்ற சம்பவத்தின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஷிரால் லக்திலக் கவும் இருக்க கூடும் என கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சபைத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் அடங்கிய வேட்புமனுவை நவசம சமாஜ கட்சி தாக்கல் செய்திருந்தது.

அதில் போலியான பெயர்கள் இடம்பெற்ற சம்பவம் சூழ்ச் சியால் ஏற்பட்ட பிரதிபலனாக இருக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

வேட்புமனுவில் உள்ளடக்கப்பட்டுள்ள போலியான பெயர்கள் எனக் கூறப்படும் நபர்களை கண்டறிய கட்சியின் பிரதி நிதிகள் கட்சியின் தலைமை யகத்திற்கு அனுப்பி வைக் கப்பட்ட போதிலும் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை.

ஷிரால் லக்திலக்க இச் சம்பவம் பற்றி விமர்சித்துள்ளதால், அவர் இதன்பின்னணியில் இருக்கக் கூடும் என்ற சந்தேகம் உள்ளது.

எவ்வாறாயினும் கம்பஹா மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு பத்திரத்தை தெரிவத்தாட்சி அதிகாரி ஏற்றுக் கொண்டுள்ளார். இதனால் அது நிராகரிக்கப்படும் ஆபத்தில்லை.

எனினும் வேட்புமனு நிரா கரிக்கப்படும் நிலைமை உருவானால் அதற்கு எதிராக நீதி மன்றத்திற்கு செல்ல போவதாக வும் விக்ரமபாகு கருணாரட்ன குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# இளைஞர் கழக நிர்வாகத் தெரிவு

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவாகியுள்ளனர். இதன்படி தலைவராக ச.செந்தில்குமரனும் பொருளாளராக அ.ஜெபநேசனும் அமைப்பாளராக டொன் சில்வெஸ்ரனும் உப தலைவராக றொபின்சனும் உப செயலராக தர்சிகாவும் உப அமைப்பாளராக கீர்த்தனாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்தோடு துறை ரீதியான தெரிவில் விளையாட்டுத் துறைக்கு ஜீன்கார்த்திகாவும் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் துறைக்கு நிலக்ஷனும் கலாசாரத் துறைக்கு குகதர்ஷனும் சூழல் பாதுகாப்பு துறைக்கு சுலக்ஷனாவும் ஊடகத் துறைக்கு டி.கூரெயும் தெரிவாகினர்.

(அ-9-23)


# கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச.-கிளிநொச்சி பதவி வெற்றிடங்கள்

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01.பதவி- போக்குவரத்து உத்தியோகத்தர்-204/13
சம்பளத்திட்டம்- 9950-11700
85X10-90X10

**தகைமைகள்:-**

அ). கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் போக்குவரத்து சேவை தொடர்பான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

**அல்லது**

ஆ). க.பொ.த. சாதாரண தரம்/தே.க.பொ.த. பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத எண்கணிதம்/ வர்த்த எண்கணிதம்/ கணிதம் உடன் சிங்களம்/தமிழ்மொழி என்பனவற்றை உள்ளடக்கி 04 திறமைச் சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் போக்குவரத்து தொடர்புடைய கடமையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

02.பதவி- சாரதி-312/13
சம்பளத்திட்டம்- 9950-11700
85X10- 90X10

**தகைமைகள்:-**

அ). 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து/லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

03.பதவி- சாரதி-312/14
சம்பளத்திட்டம்- 9700-11350
80X10-85X10

**தகைமைகள்:-**

அ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து/ லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

- வயதெல்லை:- 18-45 (சங்கப்பணியாளருக்கு இவ் வயதெல்லை பொருந்தாது)
- விண்ணப்ப முடிவுத்திகதி:- 28.02.2014

**ஏனைய விபரங்கள்:-**

- இப்பதவிகளுக்குரிய அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய அடிப்படைச் சம்பளத்தின் 15% விசேடபடி, வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 5,850.00 மற்றும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி கல்வித்தகைமை சான்றிதழ், சேவைத்தகைமைச் சான்றிதழ், ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை இணைத்து, தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கனகபுரம் கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதவுத்தபாலிலோ அல்லது நேரிலோ 28.02.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் அச்சங்கத்தினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

திகதி: 12.02.2014

தலைவர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,
கிளிநொச்சி.

(சி-6484)



கல்யாண மாலை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 37<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L / Network Administrator<br>தொ.இ: B/1067 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 32 செவ் 8 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: NCE<br>தொ.இ: G/1525 |
| பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 15 ½ செவ் 8 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / சாரதி (ஜேர்மன் - PR)<br>தொ.இ: B/1068 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: 9<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc, MSc, SLIIT / Associate Q.A Engineer<br>தொ.இ: G/1527 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 62 ¼<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L / பொலிஸ்<br>தொ.இ: B/1069 | பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: 91 செவ் 7 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / பிரத்தி யோக வகுப்பு ஆசிரியர்<br>தொ.இ: G/1531 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 29 ¼<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / Hardware Manager<br>தொ.இ: B/1070 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 17<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBA / உதவிக் கணக்காளர் (அரசு)<br>தொ.இ: G/1532 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நலனே எமக்கு முக்கியம்

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் நீண்டகாலப் போரினால் பாதிக்கப்பட்டவர்கள். இவர்களின் நலனே எமக்கு முக்கியம். மக்களின் பிரச்சினைகளை தீர்த்து







வைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளருடனான சந்திப்பின்போது தெரிவித்துள்ளார். மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஐ.நா.பிரதிநிதிக்கு ஆளுநர் விளக்கமளித்திருந்தார்.

அதில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்துச் செல்ல தாம் தயாராகவிருப்பதாகவும் ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

ஆளுநருடனான சந்திப்பினையடுத்து யாழ். கோவில் வீதியிலுள்ள வடக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு சர்வதேச பக்கச் சார்பற்ற நீதி விசாரணை வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இதனிடையே ஐ.நா. அமர்வில் அமெரிக்காவினால் மூன்றாவது தடவையாகவும் இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்று கொண்டு வரப்படவுள்ளது என்ற தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஐ.நா. அமர்வுக்கு முன்னதாக வடக்கில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதோடு இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் அரசு பல முன்னேற்பாடுகளை செய்து வருகின்றது.

இது இவ்வாறு இருக்கையில், ஐ.நாவின் அதிகாரிகளும் இலங்கை நோக்கிய பயணத்தை அதிகரித்துள்ளனர்.

இந்நிலையில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகமும் யு.என்.டி.பியின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளருமான ஹோலியங் சூ நேற்று வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு காலை 9.30 மணியளவில் வருகை தந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த ஐ.நா.உதவிச் செயலாளர் சூ வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்பு வடக்கில் மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் வாசஸ்தலத்திற்கு வருகைதந்த ஐ.நா.பிரதிநிதி முற்பகல் 10.45 மணிமுதல் சுமார் 12 மணிவரை முதலமைச்சருடன்



கலந்துரையாடினார்.

ஐ.நா.பிரதிநிதியுடனான சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த முதலமைச்சர், மக்களின் நலனே எமக்கு முக்கியம். நீண்டகாலப் போரினால் எமது மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் அதிகளவில் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

அவர்களின் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்.

வடக்கு மாகாண ஆளுநரும் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவிருப்பதாக கூறியுள்ளார்.

அந்தக் கூற்றை நாம் வரவேற்கின்றோம். மாகாண சபையுடன் இணைந்து அபிவிருத்திப் பணிகளையும் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யவும் அரசு முன்வருமாகவிருந்தால் இணைந்து செயற்பட நாமும் தயாராகவுள்ளோம் என்றார் முதலமைச்சர்.

இதேவேளை, வடக்கு மாகாண சபையில் ஐந்து அமர்வுகள் இடம்பெற்ற பின்னரும் கூட மாகாண சபைக்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை சர்வதேச சமூகத்திடம் முன்வைக்கும் நிலையிலேயே வடக்கு மாகாண சபையுள்ளது என்பதை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முதலமைச்சர் ஊடாக அறிய முடிந்தது.

அரசாங்கம் தான் முன்பு நினைத்தது போன்று தான் செயற்படுகிறது. மாகாண சபைக்கு அரசின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. போரினால் பாதிக்கப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்கு எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

ஏற்கனவே பல இடங்களில் பதிவாகிப்போன இந்தக் குற்றச்சாட்டு மீண்டும் முக்கிய இடம்பெற்றுள்ளது.

ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று கூறும் அரசாங்கம் நடைமுறையில் அதைப் புறக்கணித்து வருகின்றது என்பதையும் முதலமைச்சர் வெளிப்படுத்தியிருந்தார்.

மக்களின் கோரிக்கைகளை மாகாண சபையிடம் தரக்கூட மத்திய அரசு அதிகாரிகளும் திணைக்களத் தலைவர்களும் தயாராகவில்லை என்றும் முதலமைச்சர் கூறியிருந்தார்.

இருப்பினும் தங்களால் முடிந்தவரை வடக்கின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அரசாங்கத்திற்கு வலியுறுத்தப்படுமென ஐ.நா. பிரதிநிதி நம்பிக்கையளித்தார் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி மக்களின் கோரிக்கைகளையும் தரவுகளையும் மத்திய அரச அதிகாரிகளின் ஊடாக மாகாண சபையிடம் வழங்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் வடக்கின் அபிவிருத்திக்கு தொடர்ந்து தம்மாலான உதவிகளை வழங்கத் தயாராகவிருப்பதாகவும் ஐ.நா.பிரதிநிதி கூறியதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் வெளிநாடுகளிலிருந்து பலர் இங்கு வருகை தந்து இவ்வாறான உறுதி மொழிகளை அளித்துவிட்டு செல்வது வழக்கமாகவிருந்து வருகின்றது.

ஆனால் கடந்த காலங்களில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எவரும் நிறைவேற்றியதாக இல்லை.

இருப்பினும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகையும் அவர்களுக்கு இங்குள்ளவர்களினால் எடுத்து கூறப்படும் தமிழரின் நிலைப்பாடுகளும் அரசாங்கத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்தி வருகின்றது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

வடக்கு மாகாண சபைக்கு தேர்தலை நடத்துமாறு கடந்த காலங்களில் விடப்பட்ட கோரிக்கைகளே 2013 ஆம் ஆண்டு தேர்தலை நடத்தக்காரணமாக அமைந்தது.

மாகாண சபைகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய அதிகாரங்களை வடக்கு மாகாண சபைக்கு அரசு கொடுக்க மறுத்து வருகின்றது என்பதற்கு அப்பால் மாகாண சபைக்கான அதிகாரங்கள் இலங்கையில் போதுமானதாகவில்லை என்ற குற்றச்சாட்டும் வலுப்பெற்று வருகின்றது.

ஆயுதப் போராட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு ஐந்து ஆண்டுகளை நாடு அடைந்து விட்டது என்பது உண்மையென்றாலும் வடக்கில் ஆயுதமற்ற போராட்டமாக வறுமையின் பிடியில் சிக்கியுள்ள ஒவ்வொரு தமிழனின் குடும்பங்களிலும் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

மாகாண சபையின் ஊடாக விடிவு கிடைக்கும் என்ற முக்கிய நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வடக்கு மக்கள் பெரும் திரளாக வாக்களிக்க முன்வந்தனர். ஆனால் மக்களின் விடிவு கேள்விக்குறியாக்கப்பட்ட நிலையில் மாகாண சபையின் செயற்பாடு உள்ளது.

இதற்கு காரணம் மத்திய அரசுதான் என்று ஆளும் கட்சி குற்றம் சாட்ட ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று அரசாங்கம் வெறுமனவே கூறிக் கொண்டிருப்பதனால் முன்னேற்றங்கள் ஏதும் ஏற்படுமா?

வடக்கு மாகாண சபையினால் தமிழர்களுக்கான நிரந்தர தீர்வை பெற்றுத் தரமுடியாது என்று தேர்தல் காலத்தில் கூறிவந்த அரசாங்கத்தரப்பினர் அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது பலரது கோரிக்கையாகவுள்ளது.

**எஸ்.ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மகிழ்

Botanical Name-Mimusops elengi
Family-Sapotaceae
Engl-pointed leaved ape
Sinh-Munamal

சிறுமரம் 4-5மீற்றர் உயரமானது. எப்பொழுதும் பசுமையாக இருக்கும். தனியிலை பளபளப்பானது. 8-10 சென்ரி மீற்றர் நீளமும் 2-3 சென்ரி மீற்றர் அகலமும் உள்ளது. தனிமலர். காம்புடன் இலைக் கோணத்தில் உண்டாகும். மலர்கள் மழுங்கிய வெண்மை நிறமானது. மலர்ந்ததும் காம்பிலிருந்து கழன்று விடும். 8 புற இதழ்களும் 8 அக இதழ்களும் இணைந்து இருக்கும். நறுமணமுடைய பூக்கள். மலர் வாடினாலும் மணமிருக்கும். முட்டை



வடிவ மஞ்சள் நிறமுள்ள சதைக் கனி நீளமானது. விதையில் நறுமண எண்ணெய் உண்டு.

விதைகள் மூலமும் வேர்கன்று கள் மூலமும் இன விருத்தி செய்யலாம்.

### மருத்துவ பயன்கள்

மகிழ மரத்தின் பிஞ்சுகளை(2) வாயில் மென்று துப்பிவிட்டு வெந்நீரில் வாய் கொப்பளித்தால் பல் தொல்லைகள் தீரும்.

★ மகிழ்ம்பூவை குடிநீரிட்டு 30-60மில்லி காலை மாலை குடிக்க உடல் வெப்பந்தணியும் உடல்வன்மைபெறும்.

★ பூக்களை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து, அரித்து, பொடியை முகர மூக்கில் நீர் பாய்ந்து தலைப் பாரம், மண்டைச்சளியை நீக்கும்.

★ பல் ஈறுகட்டி, பல் வலித்து, முரசு கரையும் நிலைமைகளில் இதன் மரப்பட்டைகளை சேகரித்து சிறு சிறு துண்டுகளாக வெட்டி ,நிழலில் உலர்த்தி, பொடிசெய்து பல் துலக்கி வரலாம். அல்லது ஒரு பங்கு பட்டைக்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக காய்ச்சிவாய்கொப்பளித்து வர பல் ஈறு இறுகுவதுடன்முரசால் இரத்தம் வடிதலும் நிற்கும் ஏனெனில் இதன் பட்டைக்கு துவர்ப்பு சுவையுண்டு.

★மகிழம் மர இலைகளைசேகரித்து நன்கு கழுவி பன்னீர் சேர்த்து அரைத்து உடல் முழுவதும் பூசிக் குளித்தால் வியர்வை நாற்றம் நீங்கும்.

★ மகிழம் பூ, சாதிக்காய் (வெளிக் கோது நீக்கி) இரண்டையும் சம அளவு எடுத்து பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை சாப்பிட்டால் உடற் கட்டுக்கள் பலம் பெறும்.



★ மகிழம்பூ போட்டுக் காய்ச்சிய தண்ணீரை காய்ச்சி பசும்பாலில் கலந்து குடிக்க ஆண்மைபெருகும்.

★ மகிழமரப்பட்டையை போட்டு கொதிக்க வைத்த தண்ணீரால் குளித்து வந்தால் தோல் நோய்கள் குணமாகும்.

இதன் விதைகளை சுட்டு, பொடித்து பல்துலக்கி வர பல்நோய்கள் நீங்கும்.

இதன் பழங்களை சாப்பிடுவதால் உயிர்ச்சத்து A கிடைக்கும். ஆனால், சிறிது துவர்ப்பாகவும் இருக்கும்.

சாதாரணமாக நீங்கள் வீட்டில் தயாரிக்கக்கூடிய பற்பொடி:

கடுக்காய்ப்பிஞ்சு- 70 கிராம்
மாயாக்காய் -70 கிராம்
மகிழம்பட்டை -140 கிராம்
கருவேலம்பட்டை-140கிராம்
ஓமம் -10 கிராம்
காசுக்கட்டி -70 கிராம்

இவைகளை தனியே இடித்துபொடிசெய்துகொண்டு ஒன்றாகக் கலக்கி கலந்து கொள்ளவும். இப் பொடியைக் கொண்டு நாளாந்தம் பல்துலக்கி வர பல்வலி, பல்நோய், இரத்தம் வருதல், வாய்நாற்றம், பல்கூச்சம் நீங்கும்.

நீங்கள் வீட்டில் தயாரிக்கும் குளியல் பொடி

மகிழம்பூ -150 கிராம்
சந்தனம் -150 கிராம்
பச்சைப்பயறு -100 கிராம்
கோரைக்கிழங்கு -100 கிராம்
வெட்டிவேர் -100 கிராம்
உலர்ந்த எலுமிச்சம்பழத் தோல்-100 கிராம்


மேற்கண்ட மூலிகைகளை உலர்த்தி, பொடி செய்து உடம்பு முழுக்க தேய்த்து குளிக்கவும். சவர்க்காரம் பயன்படுத்த வேண்டாம். சொறி, சிரங்கு, வரட்சி என்பன தோலில் ஏற்படாது. இதே பொடியை தலைக்கு வைத்து முழுகிவர பொடுகு நீங்கும். முடி மிருதுவாகவும் மணத்தோடும் இருக்கும்.

★ பவளமல்லிகைப் பூக்களைச் சேகரித்து கசக்கிச் சாறு பிழிந்து அத்துடன் மகிழம்பூக்களையும் கலந்து மேற்படி சாறுகளை சூரிய ஒளியில் நன்றாக உலர்த்தினால் சாந்தாக மாறிவிடும். அதை பொட்டாக உபயோகிக்கலாம். ஆனால், நிறைய பூக்கள் தேவைப்படும். மிகவும் உயர்ந்த மூலிகைச்சாந்தாகும். இதனால் சருமத்தில் ஒவ்வாமை ஏற்பட மாட்டாது. முகச்சுருக்கம் நீங்க கசகசாவை ஊறவைத்து அரைத்து முகத்தில் பூசி 1/2 மணிநேரம் கழித்து மகிழம்பூ ஊறிய குடிநீரால் கழுவ தோல் சுருக்கம் மறையும்.

★ கரும்புள்ளிகள் மறைய சாதிக்காயை மகிழம்பூ குடிநீரில் ஊற வைத்து அரைத்து தடவலாம்.

★மகிழம்பூவிதைகளைபொடித்து நெய்கூட்டி அரைத்து சீலையிற் தடவித் திரியாக்கி குழந்தைகளுக்கு கீழ்வாயிற் செருக மலக்கட்டு நீங்கி, மலம் இலகுவாக வெளியேறும்.

★ மகிழம்பட்டை அவித்த குடிநீரால் புண்ணைக் கழுவ புண்கள் இலகுவில் ஆறும்.



திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

# யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு சிறப்பு செயற்றிட்டம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்காக சிறப்பு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கபபடவுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார தொண்டர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையின் நிரந்தர ஊழியர்களாக உள்வாங்குவதில் சுகாதார அமைச்சும் மிக இறுக்கமான கட்டுப்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில்தற்போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சென.ஜோன்ஸ் அம்புல ன்ஸ் படைப் பிரிவு ஆகியவற்றை சேர்ந்த சுகாதார தொண்டர்கள் தற்காலிக அடிப்படையில் பணியாற்றி வரும் நிலையில் அவர்களது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக மாதாந்த ஊதியத்தை வழங்க நாம் தீர்மானித்துள்ளோம்.

அதனடிப்படையில் தான் இவ்வாறு பணியாற்றும் 190 பேருக்கு நாளொன்றுக்கு 175 ரூபா வீதம் மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக வழங்கவுள்ளதாகவும், குறித்த தொண்டர்கள் மாற்றுத் தொழிலொன்றை பெற்றுக் கொள்ளும் வரையில் இவ் வாழ்வாதார உதவி கிடைக்கும் என்பதுடன் எதிர்காலத்தில் இவ் உதவித் திட்டத்தை அதிகரிக்க எண்ணியுள்ளதாகவும் இது கட்சியின் மக்கள் சேவைக்கான மற்றுமொரு பணியெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் நீங்கள் எல்லோரும் உங்களது கடமைகளையுணர்ந்து வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்களுடனும் மக்களுடனும் மனிதநேயத்துடன் நடந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட அமைச்சர் நீங்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஒரு போதும் இடமளிக்கக்கூடாது என்பதுடன் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கும் அதே வேளை, ஒருவருக்கொருவர் மதிப்பளிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

உங்களுக்கான வளமான சந்தோசமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுப்பதே எனது நோக்கமெனவும் தவறான வழிநடத்தல்களுக்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது எனவும் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் எதிர்கால மேம்பாடு மற்றும் அபிவிருத்திக்காக பல்வேறு சிறப்பு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்கவுள்ள நிலையில் அனைவரும் ஒன்றிணைந்த ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்றும் அமைச்சர் டக்ளஸ தேவானந்தா இதன் போது கேட்டுக் கொண்டார்.

இதில் சுகாதார தொண்டர்களுக்கான உதவிக்கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது யாழ், போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு செயலாளர் இரா.செல்வ வடிவேல், அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கி ணைப்பாளர் கே.வி குகேந்திரன், ஈ.பி.டி.பியின் சுவிஸ் பிராந்திய முக்கியஸ்தர் திலக், ஈ.பி.டி.பியின் வட மாராட்சி இணைப்பாளர் ஸ்ரீரங் கேஸ்வரன், மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளர் ரஜீவ் ஆகியோர் உடனிருந்தனர். (அ-2)

# புலம்பெயர் மக்களை உருவாக்கியது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமே

## கொதிக்கிறார் அமைச்சர் சுசில்

புலம்பெயர் மக்கள் நாட்டுக்கு எதிராக செயற்படுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியே காரணம் என அரசாங்கம் அறிவித்துள்ளது. தமிழ் புலம்பெயர் சமூகம் என்ற ஒன்றை உருவாக் கியதே ஐக்கிய தேசியக் கட்சியாகும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

டார்லி வீதியில் அமைந்துள்ள, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

1983ஆம் ஆண்டு தமிழ் மக்கள மீதான தாக்குதல்களை ஜே.ஆர். ஜயவர்தன தடுத்திருந்தால் புலம் பெயர் தமிழ் சமூகம் உருவாகி யிருக்காது.

ஜே.ஆர். ஜயவர்தனவின் அமைச்சரவையில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் அங்கம் வகித்தார் .

தமிழ் மக்கள் மீது தாக்கு தல்களை தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தால் தமிழ் மக்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றிருக்கமாட்டார்கள்.

அரச படையினர் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக புலம் பெயர் தமிழர்கள குற்றம் சுமத்தி வருகின்றனர்.

புலம்பெயர் தமிழர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக உரிய பிரசாரம் செய்யப்படவில்லை என தற்போது ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தி வருவதாகவும், உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியே புலம்பெயர் தமிழ் சமூகத்தை உருவாக்கியது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உள்நாட்டு பிரச்சினைகளை ஐக்கிய தேசியக் கட்சி சர்வதேச மய ப்படுத்தி வருகிறது. கடந்த 2001ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே சர்வதேச கண்காணிப்பாளர்கள் இலங் கையில் கடமையாற்றினார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கஞ்சா புகைத்த பல்கலை. மாணவர்கள் கைது

களனிப் பல்கலைக்கழக வளாகத்தில் கஞ்சா புகைத்துக் கொண்டிருந்த கலைமற்றும்வர்த்தகபீடங்களைச் சேர்ந்த 13 மாணவர்களை பல்கலைக்கழக ஒழுக்க நிர்வாக அதிகாரிகளின் உதவியுடன் கைது செய்துள்ளனர். பேலியகொடை பொலிஸார் அவர்கள் வசமிருந்த 13 கஞ்சா சுருட்டுகளையும் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை மஹர நீதி மன்றத்தில் நேற்றையதினம் ஆஜர் படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

717

## ஆனந்தனின் அமரகாவியம்

அப்போது அவன் "ஐயா! நான் என் கதையைக் கூறுகிறேன். அதை இராமாயணம்போல நீங்கள்



எழுதிக் கொடுங்கள். என்னை எல்லோரும் நினைத்துக்கொணடே இருப்பார்கள். உங்களுக்கும் வால்மீகியைப் போலப் பேர் கிடைக்கும்" என்றான். பரமேசுவரரும் "சரி, உன் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறு. அவை ராமருடையவை போல உள்ளனவா என்று பார்க்கலாம்" என்றார். அவனும் தன்னைப் பற்றிக் கூறவே அவரும்" நீயே உன் கதையை வால்மீகி முனிவர் எழுதியது போல எழுதி எல்லோருக்கும் சொல்லலாமே. உன் திறமை வால்மீகி முனிவரது போலவே உன்னுள் மறைந்துள்ளது" என்றார்.

அதன்பின் அவன் தன் வரலாற்றைச் செய்யுள் வடிவில் எழுதி அதைத் தன் மனைவிக்குப் படித்துக் காட்டி "எப்படி இருக்கிறது நான் எழுதிய காவியம்?" என்று கேட்டான். அவளும் "இராமாயணத்தை எவ்வளவு தடவை நீ கேட்டாலும் சலிப்பு அடைவது இல்லையே. அது போல இதை கேட்டால் சலிப்பு அடைவது ஏனோ?" அது இனிமையாக இருப்பதால் கேட்க முடிகிறது" என்றாள் அவள். அப்போது ஆனந்தன் "ஓ! லவனும் குசனும் இராமாயணத்தை இனிமையாகப் பாடிப் பரப்பினார்கள். நானும் என் பேரன்களிடம் இதைப் பாடச் சொல்லிப் பரப்புகிறேன்" என்று எண்ணித் தான் இயற்றியதைப் பாடச் சொன்னான். அவர்களோ "இந்தக் கதை நன்றாகவே இல்லை. இராமாயணத்தைப் பாடிக் காட்டுவது போல இதைப் பாட முடியாது" என்று கூறி விட்டு ஓடி விட்டார்கள்.

நான் எழுதிய தன் கதையைக் கேட்க யா்ராவது இருக்கிறார்களா என்று அவன் தன் ஊரில் இரண்டொருவரை அணுகினான். அவர்கள் அவனைக் கண்டதுமே ஓட்டம் பிடித்தார்கள் இனி அந்த ஊரில் யாரும் கேட்க மாட்டார்கள் என்று எண்ணி அவன் அடுத்த ஊரை நோக்கிச் சென்றான். சற்று தூரம் போனதுமே ஒரு மரத்தடியில் ஒரு இளைஞன் நினைவு இழந்து விழுந்து கிடப்பதைக் கண்டான். அவனைத் தூக்கி ஒரு வண்டியில் போட்டு ஆனந்தன் தன் ஊருக்குக் கொண்டு போய் ஒரு வைத்தியரிடம் காட்டினான். அவரும் அந்த இளைஞன் ஏதோ ஒரு விஷக்கனியைச் சாப்பிட்டிருக்க வேண்டும் என்று கூறி மூன்று நாட்கள் சிகிச்சை அளித்தார்.

நான்காவது நாள் அவன் தன் நினைவு பெற்று எழுந்து உட்கார்ந்தான். தன்னைக் காப்பாற்றியன் ஆனந்தன் என்று அறிந்த அந்த இளைஞன் அவனுக்கு நன்றி செலுத்தினான். அப்போது ஆனந்தன் "நன்றி செலுத்தியது சரி. நான் என் சரிதையைக் காவியமாக எழுதி இருக்கிறேன். அதைப் படிக்கிறேன் கேட்டு எவ்வளவு நன்றாக இருக்கிறது என்று கூறு" எனக் கூறித்தான் எழுதி வைத்துள்ளதைப் படிக்கலானான். இளைஞனும் அதைக் கேட்கலானான். ஆனால் வெகு நேரம் வரை அதைக் கேட்டுக் கொண்டிருக்கப் பொறுமை இல்லை. ஆனால் தன்னை ஆனந்தன் காப்பாற்றினானே என்பதற்காகப் பல்லைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தான்.

அப்போது ஆனந்தன் "பேஷ்! நீ இதைக் கேட்டு ரசித்தாய். இனி இதற்கு மன்னரின் அங்கீகாரம் கிடைக்கப் பாடுபடுகிறேன்" என்றான். அப்போது அந்த இளைஞன் "நான் மன்னன் அல்ல என்றாலும் மாறுவேடத்தில் வந்த இளவரசனே. நான் சொன்னால் என் தந்தை கேட்பார்" என்றான். அதைக் கேட்ட ஆனந்தன் மகிழ்ந்து போய் "ஆகா! என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம் என் இந்தக் காவியம் இராமாயணத்தைப் போலப் போற்றிப் புகழ்ந்து பேசப் பட வேண்டும். அதை நீங்கள் செய்து விட்டால் எனக்கு நன்றி செலுத்தியது போலாகிவிடும்" என்றான்.


அதைக் கேட்ட இளவரசன் அனங்கபாலன் திகைத்துப்போனான். வால்மீகியின் இராமாயணம் எங்கே? இவன் எழுதிய இந்த குப்பை எங்கே! இவ்வாறு யோசித்த இளவரசன் அவனிடம் "சரி என்னைப்போல இதை இன்னமும் எத்தனை பேர்கள் கேட்டார்கள்?" என்று விசாரிக்கவே ஆனந்தனும் உற்சாகமாக "இது வரை உங்களையும் சேர்த்து மொத்தம் பன்னிரண்டு பேர்கள் கேட்டிருக்கிறார்கள்" என்றான்.

அப்போது அனங்கபாலன் "நம் நாட்டின் மக்கள் தொகை பத்து லட்சம். நீ கூறிய பன்னிரண்டு பேர்கள் போக மீதம் உள்ளவர்கள் உன் காவியத்தைப் புகழ்ந்து பேச ஏற்பாடு செய்கிறேன். ஆனால் நீ எனக்கு ஒரு வாக்குக் கொடுக்க வேண்டும். வால்மீகி முனிவர் தம் வாழ் நாளில் இராமாயணம் ஒன்றைத்தான் எழுதினார். அவரைப் போல இந்த ஒரு காவியம் எழுதியதோடு நிறுத்திவிட வேண்டும் இனிமேல் எதுவும் எழுதக் கூடாது" என்றான். ஆனந்தனும் அந்த வாக்கைக் கொடுத்தான். அனங்கபாலன் ஆனந்தனைத் தன்னோடு கூட்டிக் கொண்டு தலைநகருக்குச் சென்றான். அங்கு அவன் தன் தந்தையிடம் ஆனந்தனை அறிமுகப்படுத்தி "இவர் வால்மீகி போனற கவிஞர். இராமாயணத்திற்கு இணையாக இவர் ஒரு காவியம் எழுதி இருக்கிறார்.

அதனை நாட்டில் பிரபலப் படுத்த வேண்டும். இவருக்கு ஒரு உயரிய பதவியும் அளிக்க வேண்டும்" என்று கூறி ஆனந்தன் எழுதிய காவியத்தின் ஒரே பிரதியாக இருந்ததை மன்னனிடம் நீட்டினான்.

மன்னனும் அதன் மீது ராஜ முத்திரை போட்டு அனங்கபாலனிடம் கொடுத்தான். அவனும் அதை பத்திரமாக வைத்திருப்பதாகக் கூறி எடுத்துச் சென்றான். அன்று முதல் நாடெங்கிலும் ஆனந்தன் இராமாயணத்தைவிட உயர்ந்த காவியம் ஒன்று எழுதி இருக்கிறான் என்று பேசப்பட்டது. ஆனால் அந்தக் காவியத்தை யாரும் படித்துப் பார்த்ததாகக் கூறவில்லை. அந்தக் காவியத்தின் ஒரே பிரதி இளவரசனிடம் இருந்தது அதைப் படித்துவிட்டுத் தருவதாகக் கேட்டவர்களிடம் எல்லாம் அவன் "அது நெருப்புப் பிடித்து எரிந்து போயிற்று. ஆனந்தனிடம் அதை மீண்டும் எழுதச் சொன்னால் எழுத முடியாது என்று கூறி விட்டான். எனவே அது





ஒன்று இருந்தது என்று பேசிக் கொண்டு தான் இருக்க முடியுமே யொழிய அதனை யாராலும் படிக்க முடி யாது என்றே கூறி வந்தான்.

(முற்றும்)

02.2014
12

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ➢1502 - இந்தியாவுக்கான தனது இரண்டாவது கடற் பயணத்தை வாஸ்கோடகாமா லிஸ்பனில் இருந்து ஆரம்பித்தார்.
- ➢1733 - ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியா ஆங்கிலக் குடியேற்ற நாடாக ஜேம்ஸ் ஒக்லிதோர்ப் என்பவரால் அமைக்கப்பட்டது.
- ➢1771 - சுவீடன் மன்னன் அடொல்ஃப் பிரெடெரிக் இறந்ததை அடுத்து அவனது மகன் மூன்றாம் குஸ்டாவ் மன்னன் ஆனான்.
- ➢1818 - சிலி ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- ➢1832 - கலாபகசுத் தீவுகளை எக்குவாடோர் இணைத்துக் கொண்டது.
- ➢1873.- எமிலியோ காஸ்டெல்லார் ஸ்பெயினின் புதிய குடியரசின் பிரதமராக ஆனார்.
- ➢1912 - சீனாவின் கடைசி அரசன் க்சுவாண்டொங் முடி துறந்தான்.
- ➢1912 - சீனக் குடியரசில் கிரெகோரியன் நாட்காட்டி அமுலுக்கு வந்தது.
- ➢1927 - முதலாவது பிரித்தானியப் படைகள் ஷங்காய் நகரை அடைந்தன.
- ➢1934 - ஆஸ்திரியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது.
- ➢1961 - வெனேரா 1 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் வெள்ளிக் கோளை நோக்கி ஏவியது.
- ➢2001 - நியர் ஷூமேக்கர் என்ற விண்கலம் 433 ஈரோஸ் என்ற சிறுகோளில் தரையிறங்கியது. சிறுகோள் ஒன்றில் தரையிறங்கிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- ➢2002 - யூகொஸ்லாவியாவின் முன்னாள் தலைவர் சிலொபடான் மிலோசெவிச் மீது ஹேக் நகரில் ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைகள் ஆரம்பமாயின.

### பிறப்புகள்

- ➢1809 - சார்ள்ஸ் டார்வின், ஆங்கிலேய இயற்கையியல் அறிஞர் (இ. 1882)
- ➢**1809 - ஆபிரகாம் லிங்கன், ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதி (இ. 1865)**
- ➢1918 - ஜூலீயன் ஷ்விங்கர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (இ. 1994)
- ➢1967 - என். ரவிக்கிரன், சித்திர வீணைக் கலைஞர்

### இறப்புகள்

- ➢1804 - இம்மானுவேல் கண்ட், ஜேர்மனியைச் சேர்ந்த மெய்யியலாளர் (பி. 1724)
- ➢1908 - ஜி. யு. போப், தமிழ்நாட்டில் தமிழ்ப் பணி புரிந்த அமெரிக்கர் (பி. 1820)
- ➢2009 - முருகதாசன், தீக்குளித்து இறந்த ஈழத் தமிழன் (பி. 1982)

## ஆப்ரகாம் லிங்கன்



1809 ஆம் ஆண்டு பெப்ரவரி 12ஆம் தேதி அமெரிக்காவின் கெண்டக்கியில் ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்தார் ஆபிரகாம் லிங்கன். அவரது தந்தை தாமஸ் லிங்கன். குடும்ப ஏழ்மை காரணமாக லிங்கனால் சரியாக படிக்க முடியவில்லை. பிறருக்கு உதவி செய்தல், அடுத்தவர் மீது அன்பு செலுத்துதல் போன்ற அரிய குணங்கள் சிறு வயதிலேயே லிங்கனிடம் இருந்தது. எப்போதும் கலகலப்பாகப் பழகுதல் கதை சொல்லுதல் வேடிக்கையாகப் பேசுதல் ஆகிய லிங்கனின் குணங்கள் அவர் மீது மற்றவர்களை விருப்பம் கொள்ளச் செய்தன.

இவர் தனது இருபத்து மூன்றாவது வயதில் முதன் முதல் ஆபிரகாம் லிங்கன் பிளாக் காக் போரில் ( black hawk war ) கலந்து தலைவனாக பணியாற்றியது அவருக்கு புதியதோர் பாதையை காட்டியது.

ஆபிரகாம் லிங்கன் ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது குடியரசுத் தலைவராவார். அடிமை முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை ஒழிக்க முனைந்தவர்களில் ஒருவர்.

1860 இல் மேற்கு மாநிலங்களில் தலைவராக இருந்த இவர் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக வெற்றி பெற்றார்.

ஐக்கிய அமெரிக்காவைப் பிளவுபடாமல் காக்க, தென் மாநிலப் பிரிவினைக் கருத்தாளர்களை எதிர் கொண்டு உள்நாட்டுப் போர் நடத்தி வெற்றி பெற்றவர்.

1847 தொடக்கம் 1849 ஆண்டுகளில் அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினராக பணிபுரிந்தார். 1860 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதியில் 1865 இவர் வோஷிங்டன் டி.சி யில் உள்ள ஃவோர்டு அரங்கில் ஜான் வில்கிஸ் பூத் என்பவனால் கொல்லப்பட்டார். அமெரிக்க ஒன்றியத்தின் ஒற்றுமைக்காக உயிர் துறந்து புகழ் எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

**ஆன்மீகம் 31**

…அத்தி மரங்களைத் தழுவிக் கொண்டு ஓடுவதால் இந்த ஊற்றுக்கு அத்தி ஊத்து என்று பெயர் வந்த தாம். வனத்துறையினர் ஆற்றின் நடுவே இருக்கும் அத்தி மரத்தில் அத்தி ஊத்து பெயர்ப் பலகையை வைத்துள்ளனர்.

இடுப்பளவு நீர் ஓடிக்கொண்டி ருக்கும் இவ்வாற்றில் மழைக்காலங் களில் கழுத்தளவு நீர் ஓடுமாம்.


ஆற்றில் நீர் அதிகமாகச் செல்வ தால் திரும்பி வரும்போது மரத்தை யும் பாறையையும் இணைப்பதுபோல அமைக்கப்பட்டிருக்கும் சங்கிலி ஒன்றைப் பிடித்தவண்ணமே கடக்க இயலும். நீர் மட்டம் உயர்ந்து காணப்படும் சமயங்களில் இந்தச் சங்கிலி ஒன்றே பாதையின் அடை யாளமாக வெளித்தெரியும். அத் தகைய சந்தர்ப்பங்களில் இந்த சங்கிலியைப் பிடித்துக் கொண்டே அத்தி மரமிருக்கும் மேடைக்கு ஏறி பிறகு அக்கரையை கடக்க வேண் டும். இதனால் இந்த வழியை சங்கி லிப்பாறை அல்லது சங்கிலிப் பாதை என்று அழைக்கின்றனர்.

இப்பொழுது அத்தியூத்து என்று வழங்கப்படும் இந்த ஆற்றின் புராண பெயர் கௌண்டின்னிய தீர்த்தம்.

கௌண்டின்னிய தீர்த்தத்திற்கு அப்பெயர் வந்ததற்குப் பின்வரும் வர லாறு தலபுராணத்தில் கூறப்படுகிறது.

வேத, ஆகம, புராண, சாஸ்திர தவ யோக சாதனைகளில் வல்லவரான கௌண்டின்னிய முனிவர் என்பவர் சதுரகிரி வந்தடைந்து, தாம் நற்கதி அடைய வேண்டுமென்பதற்காக ஐம்புலன் களையும் ஒருமுகமாக்கி முழுமுதற் கடவுளை நோக்கி கடுந்தவத்தில் ஈடு பட்டார்.

இந்தக் கடுந்தவத்தின் விளைவாக



(சங்கிலிப்பாறை) அத்தி ஊத்துப் பாறை

சதுரகிரியில் இருந்த கூபம், பொய்கை, கானாறு முதலானவைகளில் தண்ணீர் வறண்டுபோனது. இதனால் தேவர் களும், ரிஷிகளும் மிகுந்த துன்பம டைந்தனர்.

இதனையறிந்த எம்பெருமானாகிய ஸ்ரீசுந்தர மகாலிங்கக் கடவுள், தேவர் களின் துன்பத்தைப் போக்கவும் கௌண்டின்னிய முனிவரின் தவத்தை நிறைவு செய்யவும் வேண்டி அம்முனி வரின் முன்பு காட்சி தந்து முனிவரே! நின் தவத்தை மெச்சினோம். நீ எதற் காக இவ்வரிய தவத்தைச் செய்கின் றனை என்று கேட்டார்.

அதற்கு முனிவரும் மகேசுவரா! அடியேன் ஆத்மஞான மோட்சத்தை அடைய வேண்டுமென்பதற்காக இந்தத் தவத்தைச் செய்து வருகிறேன். பன்னி ராயிரம் ஆண்டுகள் செய்ய வேண் டிய இந்தத் தவத்தில் இதுவரை ஆறா யிரம் வருடங்கள் சென்றுவிட்டன. இன்னும் ஆறாயிரம் வருடம் தவம் செய்தால் மட்டுமே தங்களின் பூரண தரிசனம் கிட்டும் என்ற நிலையில் இந்த ஆறாயிரம் வருட தவத்திற்கே என் மீது கருணை கொண்டு தாங்கள் காட்சியளித்தது யான் செய்த பெரும் புண்ணியம் என்று ஆனந்தப் பெருக் குடன் கணிகளில் நீர் வழிய கரம் குவித்து நின்றார்.

சுந்தர மகாலிங்கரும், நல்லது முனி வரே! உம்முடைய தவாக்கினியால் இங்குள்ள பொய்கை எல்லாவற்றி லும் நீர் வற்றி வறண்டு கிடக்கிறது. இதனால் தேவர்களும் ரிஷிகளும் மிகவும் வருந்துகின்றனர். இனியும் தவம்புரியத் தேவையில்லை. இப் பொழுது உற்பத்தியாகி வரப்போகிற நதியில் நீராடி நீ விரும்பிய மோட்ச வாழ்வைப் பெறுவாயாக என்று கூறியபடி தன் சடா மகுடத்திலிருக் கின்ற கங்கையிலிருந்து ஒரு துளி நீரை எடுத்து நான்கு மலைகளுக்கும் மத்தியில் விட்டுவிட்டு லிங்கத்தில் மறைந்தருளினார்.

சிவபெருமான் அருளிய அந்த ஒரு துளி கங்கை நதியாக உருவாகி புல், பூண்டு, செடி, கொடி, மரங்களையெல் லாம் தழைக்கச் செய்து அவ்வனத் தில் தவம்செய்து வரும் தேவர்கள் ரிஷிகள் முதலானோர் குறைகளையும் போக்கியது…

*(தொடரும்)*




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

**43**

… அடுத்த நாள் அதி காலை அந்த வீட்டிலிருந்து இந்த வீட்டுக்கு வழக்கம்



எம்.ஜி.ஆருடன் உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் அறிமுகமான லதா

போல் நடந்தே வந்ததும் வாசலில் நின்ற கூர்கா செம்மலை நிறுத்தி உள்ளே விட மறுத்தார்.

எதிரே நாராயணன் கம்பெனி முதலாளி வீடு. அதன் உரிமையாளர் பட்டண்ணாவும், அவர் மனைவியும் வெளியே வந்தனர். கூர்காவிடம் செம்மல் யார் என்பதைச் சொல்லி உள்ளே அனுப்பினர்.

பிறகு கூர்காவை பெரியவர் கோபிக்க, செம்மல் தடுத்து “அவர் கடமையைத்தானே செய்தார்? இதில் என்ன தவறு?” என்று சொல்லி நூறு ரூபாயாக இருந்த அவர் சம்பளத்தை நூற்றி இருபது ரூபாயாக உயர்த்தினார்.

இன்னொரு நிகழ்ச்சி அடிமைப் பெண் படப்பிடிப்பின்போது நடந்தது.

தாயில்லாமல் நானில்லை பாடல் காட்டி ஒகேனக்கல்லில் படமான போது–

அன்று அதன் தயாரிப்பு நிர்வாகி பத்மனாபன் “யார் கேட்டாலும் கொடுக்கக்கூடாது” என்று சொல்லி பணியாளரிடம் பத்து இளநீர்களைக் கொடுத்துச் சென்றிருந்தார்.

பகல் வேளை, வெயிலில் நின்ற செம்மல் இளநீர் கேட்டார்.

“இல்லே யாருக்கும் கொடுக்க வேணான்னு முதலாளி சொல்லியிருக் கிறார்” என்றார் பணியாளர்.

விடயம் தெரிந்து பத்மனாபன் வந்த தும் அவரிடமும் “முதலாளி! உங்க ஆளு எனக்கு ஒரு இளநீர் கொடுக்க மாட்டேங்குறார். ஒண்ணு கொடுக்கச் சொல்லுங்க” என்றார் செம்மல்.

பத்மனாபன் செம்மல் மேல் மிகுந்த பக்தியுள்ளவர். அதோடு முன்கோபி… அவனை அடிக்கவே போய்விட்டார்.


“ஏய், ஏய்… இருப்பா…. நீ சொன்னத செஞ்சார். அதுக்கு ஏன் கோவிச்சுக்குறே.

நீ முதலா[illegible] இருக்கக் கூடாது.” என்றார் செ[illegible]

அந்த இளநீர் வெட்டிக் கொடுப்ப வருக்குக் கொடுக்கப்படும் படியில் பத்து ரூபாய் அதிகமானது செம்ம லின் உத்தரவுப்படி…

சுவரொட்டி…

உலகம் சுற்றும் வாலிபன் படவெளியீட்டின்போது- சுவரொட்டி



எம்.ஜி.ஆருடன் வாலி

களுக்கிருந்த வரி ஐந்து மடங்காக அன்றைக்கு உயர்த்தப்பட்டது.

“[illegible]ப்போம்; அதற்காக [illegible]ளே ஒட்ட வேண்டாம். அச்சடித்தவை அப்படியே இருக்கட் டும். சென்னை நகரத்தைப் பொறுத்த வரை சுவர்கள்… என் போஸ்டர்கள் இல்லாமலே இருக்கட்டும். ஓடினால் இதுவும் ஒரு புரட்சிதான்” என்றார் செம்மல்.


சென்னை நகரத்தின் பட ஓட் டத்தை வைத்துத்தான் மற்ற ஊர் களில் ஓடும். சிட்டி கலக்ஷன்தான் மற்ற ஊர்களுக்கு மீட்டர். படத்தின் வெற்றியே விளம்பரத்தில்தானே இருக்கிறது என்று விநியோகஸ் தர்கள் கவலைப்பட்டனர்.

முதல்நாள் முதல் ஷோ பார்க்கி றார்கள். நல்லாயிருந்தால் கூட்டத் தைச் சேர்க்கிறார்கள். பிடிக்கவில் லையானால் படம் எடுத்தவருக்கு என்னென்னமோ பட்டம் கட்டி, அடுத் துப் பார்க்க வந்த மக்களை ரசிகர் களே திருப்பி விடுகிறார்கள்.

“பூக்கடைக்கு விளம்பரம் தேவை யில்லை ன்னு சொல்லுவாங்க. படம் ஓடட்டும் நீங்களெல்லாம் நஷ்டப் பட்டா அதைப் பணமாகவும் தருகி றேன். இல்லை…

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கிற்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா. உதவிச் செயலாளரும் யு.என்.டி.பியின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளருமான ஹோலியங் சூ உள்ளிட்ட குழுவினர் நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை சந்தித்து வடமாகாண அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடிய போது...
(படம்: எஸ்.ஆர்.கரன்,என்.குமார்)

## தோடம்பழத்துள் ஹெரோயின்

சுமார் 80 இலட்சம் பெறுமதியான ஹெரோயின்போதைப் பொருளை இலங்கைக்கு கொண்டுவர முற்பட்ட ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 64 வயதுடைய பாகிஸ்தான்பிரஜை என சுங்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பாகிஸ்தான் கராச்சியில் இருந்து இலங்கை வந்த வானூர்தியில் இவர் தோடம்பழத்தில் மறைத்து வைத்து ஹெரோயினை இலங்கைக்கு கொண்டுவர முற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவரிடம் சுங்க அதிகாரிகள் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# இலங்கையை ஆட்டிப்படைக்க மேற்குலக நாடுகள் முயற்சி

(கொழும்பு)

**இலங்கையில் யுத்தக் குற்றம், மனிதவுரிமைமீறல் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற விடயங்களை முன்வைத்து இலங்கைக்குள் தலையிட்டு அரசியல் ஸ்திரமின்மையை ஏற்படுத்தி நாட்டை ஆட்டிப்படைக்கவே அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் முயற்சிக்கின்றன. அதன்மூலம் பிராந்தியத்தில் தமது பலத்தை அதிகரிக்கவே முயற்சிக்கப்படுகின்றது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

நாட்டின் எதிர்காலம் தொடர்பான தீர்மானம் ஒன்று எடுக்கப்படவேண்டிய தீர்க்கமான காலகட்டத்தில் மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுகின்றது. காரணம் நாடு படிப்படியாக சர்வதேசத்தின் சில தரப்புக்களின் தலையீட்டுக்கு உட்படுத்தப்படுவதற்கு முயற்சிக்கப்பட்டு வருகின்றது.எதிர்வரும் மார்ச மாதம் நாட்டுக்கும் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு தரப்பினருக்கும் எதிராக தாக்குதல் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உயிர்த்தியாகம், பொறுமை, மனிதாபிமானம் போன்ற விடயங்களை முன்வைத்து பெற்றுக்கொண்ட வெற்றியை மீண்டும் திருப்பிவிடுவதற்கு சர்வதேச மட்டத்தில் முயற்சிக்கப்படுகின்றது. அதன் மூலம் இந்தத் தேர்தலில் சர்வதேசத்துக்கு சிறந்த பதில் ஒன்றை மக்கள் வழங்க வேண்டியுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் சில விடயங்களை முன்வைத்து இலங்கையில் தலையீடுகளை மேற்கொண்டு நாட்டை ஸ்திரமற்ற நிலைக்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றன.

அதன் ஊடாக பிராந்தியத்தில் தன்னை பலப்படுத்தும் முயற்சியில் இந்த நாடுகள் ஈடுபட்டுள்ளன. இந்த நோக்கங்களுக்காகவே ஜப்பான,சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் கொரியா ஆகிய நாடுகளுக்கு இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

எமது நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்துவதே அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் நோக்கமாகும். இதில் நாட்டின் எதிர்க்கட்சிகள் சிக்கிவிடாமல் இருக்கவேண்டும்.இலங்கையில் யுத்தக் குற்றம், மனிதவுரிமை மீறல் மற்றும் பொறுப்புக்கூறல் என்ற எந்த விடயமும் இல்லை. ஆனால் இந்த விடயங்களை அமெரிக்கா முன்வைத்து நாட்டுக்குள் தலையிட்டு நாட்டை ஆட்டிப்படைக்க முயற்சிக்கப்படுகின்றது. இதற்கு தேர்தலில் மக்கள் பதில் கொடுக்கவேண்டும்.

இந்நிலையில் நாட்டின் எதிர்க்கட்சிகள் எஹல பொலவின் கதாபாத்திரத்தை முன்னெடுக்க முயற்சிக்கக்கூடாது. வெள்ளையரின் ஆட்சிக்காலத்தில் எஹலபொல என்பவர் வெளளையரின் உதவியுடன் இராஜசிங்க மன்னனை பதவி நீக்கிவிட்டு தான் அரசராக முயற்சித்தார்.

ஆனால் இறுதியில் அவரால் அரசராக முடியவில்லை. அவருக்கு சுதந்திரம் கிடைக்கவுமில்லை. இந்த எஹலபொலவின் நிலைமைக்கு ஆளாகிவிடவேண்டாம் என்று எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார். (அ-2)

## தென்னாபிரிக்காவின் உதவியை பெறுவதற்கு அரசாங்கம் திட்டம்

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் எதிர்கொள்ளவுள்ள சவால்களை சமாளிக்க ஆபிரிக்க நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு, தென்னாபிரிக்காவின் உதவியை நாட இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் அடுத்தமாதம் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ள நிலையில், இந்த தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு இலங்கையும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருகட்டமாக, ஆபிரிக்க பிராந்திய குழுவில் இடம்பெற்றுள்ள நாடுகளை மடக்குவதற்கு, தென்னாபிரிக்காவைப் பயன்படுத்திக் கொள்ள இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆபிரிக்க வலயத்தில், அல்ஜீரியா, பெனின், பொட்ஸ் வானா, புர்கினா பாசோ, கொங்கோ, ஐவரிகோஸ்ட், எதியோப்பியா, காபோன், கென்யா, மொரோக்கோ, நமீபியா, சியரலியோன், தென்னாபிரிக்கா ஆகிய 13 நாடுகள் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கின்றன.

இந்த நாடுகளுக்கு மத்தியில், தென்னாபிரிக்காவுக்கு செல்வாக்கு உள்ளதால், அதனைப் பயன்படுத்தி, ஆபிரிக்க வலய நாடுகளை மடக்குவதற்கு இலங்கை அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது.

இதற்கென தென்னாபிரிக்காவுக்கு இலங்கை அமைச்சர்கள் குழுவொன்றை அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், இந்தக் குழு எப்போது பயணத்தை மேற்கொள்ளும் என்பது குறித்தோ, குழுவில் இடம்பெறும் அமைச்சர்கள் குறித்தோ இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தென்னாபிரிக்கா அக்கறை காட்டுவதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் தனக்குள்ள சவால்களை சமாளிக்க தென்னாபிரிக்காவைப் பயன்படுத்த இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையே, ஐ.நா மனிதவுரிமை பேரவையில் உள்ள சவால்களைச் சமாளிப்பது குறித்து சீனத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று முன்தினம் மாலை பீஜிங் புறப்பட்டுச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கைக்கு உதவிசெய்ய அமெரிக்கா தயாராகவுள்ளது

(கொழும்பு)

தமது பயணத்தின் போது இலங்கை அரசாங்கம் தொடர்பில் விமர்சனத்தை வெளியிடலாம் என்று பலரும் நினைத்தனர். எனினும் விமர்சனத்தை வெளியிடுவது தமது நோக்கமல்ல என்று அமெரிக்காவின் பெண்கள் விடயங்கள் தொடர்பான தூதுவர் கத்தரின் ரஸல் தெரிவித்துள்ளார்.

கத்தரின் ரஸல் இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் இலங்கை அரசாங்கத்தின் வசா மறுப்பு காரணமாக இரத்துச் செய்யப்பட்டது.

இந்நிலையில் அவர் இலங்கையில் உள்ள பெண்கள் அமைப்பினருடன் வீடியோ மாநாடு மூலம கலந்துரையாடலை நேற்று முன்தினம் மாலை நடத்தினார்.

கொழும்பிலுள்ள அமெரிக்க நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதனபோது கருத்துரைத்த ரஸல்,

இலங்கைக்கு உதவ அமெரிக்கா தயாராக உள்ளதாக குறிப்பிட்டார். 2009 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா, இலங்கைக்கு உள்ளூர அமைப்புகளின் ஊடாக மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகிறது.

கடந்த ஐந்து வருடங்களில் மாத்திரம் அமெரிக்கா 40 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு உதவியாக வழங்கியுள்ளது.

இலங்கைக்கான தமது விஜயம், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் உலகளாவிய சமாதானம் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் ஒரு கட்டமாகவே இடம் பெறவிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வீடியோ மாநாட்டு நிகழ்வின் போது கொழும்பு, யாழ்ப்பாணம உட்பட்ட பல பகுதிகளில் பெண்கள் அமைப்பினர் பங்கேற்றனர்.

அவர்கள் வடக்கு, கிழக்கில் இராணுவமயத்தை குறைத்தல், போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வாழ்வாதார திட்டங்கள், குடும்ப பிரச்சினைகள் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

தூதுவர் ரஸல், அமெரிக்க நீதியமைப்புக்களிலும் அங்கம் வகிப்பவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# எதிர்கால உறவுகள் குறித்து இலங்கையும் ஐ.நாவும் பேச்சு

(கொழும்பு)

இலங்கையும் ஐக்கிய நாடுகள் சபையும் தமக்கிடையிலான எதிர்கால உறவுகள் குறித்து கலந்துரையாடின.

இலங்கைக்கு வந்துள்ள ஐக்கிய நாடுகளின் உதவிச் செயலாளர் ஹோலியங் சூ மற்றும் இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலாளர் ரேனுக்கா செனவிரட்ன ஆகியோர் நேற்று முன்தினம் இது தொடர்பில் கலந்துரையாடினர்.



இதன்போது ஐக்கிய நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் என்பன தொடர்பில் பேசப்பட்டன.

இதனையடுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள இலங்கையின் வெளியுறவு அமைச்சு, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்துடன் இலங்கை அரசாங்கம் பேச்சு நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் மனித மேம்பாடு குறித்து தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகளின் உதவி செயலாளர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் ஐக்கிய நாடுகளின் உதவி செயலாளர் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்துள்ளார். அங்கு அவர் கடற்றொழிலாளர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனைகளை ஏற்காத வரையில் பேச்சுவார்த்தைகளுக்கு இடமில்லை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானங்களையும், சர்வதேச நிபந்தனைகளையும் அரசாங்கம் நிறைவேற்றியிருந்தால் நாம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு வந்திருப்போம். அரசாங்கமும், ஜனாதிபதியும் எமது நிபந்தனைகளை மதிக்காத வரையில் பேச்சு வார்த்தைகளுக்கு இடமில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப் பினர் தெரிவித்துள்ளனர்.

வட மாகாண சபைக்கான அதிகாரங்களை பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்தின் நிபந்தனைகளுக்கு பதில் தெரிவிக்கையிலேயே தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்க முடியாத எமக்கான கோரிக்கைகளை இனிமேலும் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளின் மூலம் வென்றெடுக்க முடியாது. சர்வதேசத்தின் உதவியே எமக்கான வழிமுறையெனவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் வார்த்தைகளில் எமக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. 2011 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

அதன்போது எம்மால் சில நிபந்தனைகள் முன் வைக்கப்பட்டன. எனினும் ஜனாதிபதி அதற்கான எவ்வித கருத்துக்களையும் அவர் தரப்பில் இருந்து வெளியிடவில்லை.

அதன் பின்னரும் நாம் அரசாங்கத்துடனான சில தனிப்பட்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டும் அரசாங்கம் எமக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

குறிப்பாக மங்கள பாராளுமன்ற அறிக்கை, சந்திரிக்கா குமாரதுங்கவினால் முன்வைக்கப்பட்ட மூன்று அறிக்கைகள் மற்றும் சர்வகட்சி குழுவின் அறிக்கைகள் உள்ளிட்ட 5 அடிப்படையிலான ஆவணங்கள் மூலம் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டன.

எனினும் நாம் முயற்சி செய்த அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.

யுத்த முடிவின் பின்னர் அரசாங்கம் சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளும் இதுவரையில் நடைமுறைப்படுத்தவில்லை. தமிழ தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளும் சர்வதேச அமைப்பினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளும் நியாயமானவையே.

இதில் ஒன்றினைக்கூட அரசாங்கம் மதித்தோ அல்லது அதன் முக்கியத்துவத்தினை உணர்ந்தோ செயற்படாதவிடத்து எம்மாலும் அரசாங்கத்தை நம்பி ஏமாறமுடியாது.

நாம் பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு செல்வதனால் எவ்வித அர்த்தமும் இல்லை. பெரும்பான்மை மக்களின் அடக்குமுறையின் கீழ் எம்மால் முன்வைக்கப்படும் எந்தவொரு கோரிக்கைகளும் அர்த்தமற்ற ஒன்றாகவே சென்று முடிவடையும்.

இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சக்திகளை நம்பியே செயற்படுகின்றது.

அரசாங்கத் தினால் எமது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாததையே நாம் சர்வதேசத்திடம் கேட்கின்றோம். இவற்றில் சட்டமுரணான எவையுமோ அல்லது தேசத்துரோக செயற்பாடுகள் எவையுமோ இல்லை.

அரசாங்கம் எதைக் கூறினாலும் அரசாங்கமும், ஜனாதிபதியும் உண்மையாக செயற்படும் வரையில் நாம் அரசாங்கத்தினை நம்பத் தயாராக இல்லை. தெரிவுக்குழு விடயத்திலும் எமக்கு நம்பிக்கை இல்லை.

தமிழ் மக்களையும் இந்நாட்டின் குடிமக்களாக மதித்து நடத்தும் வரையில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனைகள் தொடரும். வடக்கின் விடுதலையினை பெற்றுக்கொடுப்பதே எமது பிரதான நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)



திருநெல்வேலி சிமாட்கிட்ஸ் மாதிரி முன்பள்ளியின் புறநிலை கல்வி அலகினால் ஆங்கில தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நிறுவன இயக்குநர் ப.பாலமுகுந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் முன்பள்ளியின் தலைவர் அ.பஞ்சலிங்கம் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பலாலி ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி இ.இராமச்சந்திரா சிறுவனொருவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## நாடு கடத்தப்பட்டவர்கள் ஐந்து நாட்களின் பின் விடுவிக்கப்பட்டனர்

(கொழும்பு)

கடல் மூலம் அவுஸ்திரேலியாவிற்கு அகதிகளாக சென்று கிறிஸ்மஸ் தீவுகளில் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்களில் 54 பேர் கடந்த வியாழக்கிழமை தனி விமானம் மூலம் நாடு கடத்தப்பட்டனர்,

இவர்களில் சிலர் 5 நாட்களாக நீர்கொழும்பு சிறையில் அடைத்து வைத்து விசாரணைகளின் பின் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்டவர்கள் எந்த நேரமும் விசாரணைக்காக அழைக்கப்பட்டால் சமுகமளிக்க வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

## இலங்கை தமிழர்கள் இறந்தமைக்கு இந்திய காங்கிரஸ் கட்சியே காரணம்

### ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ கொதிப்பு

இலங்கையில் நடந்தேறிய போரின் போது விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை தமிழர்களுக்கும் கொடுஞ் செயல் செய்த அரசு தான் காங்கிரஸ் அரசு இந்த அரசு தூக்கி எறியப்பட வேண்டும் என வைகோ தமிழக மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுக்கோட்டையில் திருமண விழாவொன்றில் கலந்து கொண்ட வைகோ செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

கேரளாவில் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி சமூக நீதியை மிக சிறப்பாக பேசியுள்ளார். அண்ணல் அம்பேத்காரின் கொள்கைகளை தான் பின்பற்றி வருவதாகவும் மோடி கூறியுள்ளார்.

இந்த செய்தி தமிழக மக்களுக்கு மிகவும் அவசியமானது.



தமிழக வாழ்வாதாரங்களை வஞ்சித்தும் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர் தாக்குதல்களுக்கும் உடந்தையாக இருக்கும் காங்கிரஸ் அரசு, தற்போது இராணுவ கப்பலையும் இலங்கைக்கு வழங்கத் துடிக்கும் காங்கிரஸ் அரசு, அதிகார பீடத்திலிருந்து தூக்கி எறியப்பட வேண்டும்.

இதே போன்று இலங்கை தமிழர்கள் இறந்ததற்கு காரணம் காங்கிரஸ் அரசு தான்.

இலங்கையில் நடைபெற்ற போரின் போது விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை தமிழர்களுக்கும் கொடுஞ்செயல் செய்த அரசு தான் காங்கிரஸ் அரசு.

இத்தகைய கொடுஞ்செயல் செய்த காங்கிரஸ் அரசிற்கு தமிழக வாக்காளர்கள் வாக்களிக்காமல் நல்ல தீர்ப்பை தமிழக மக்கள் வழங்குவார்கள் என்று நம்புகிறேன்.

நாடாளுமன்ற தேர்தலில் பணம் வெள்ளமாக பாய்ந்தாலும் தி.மு.க. அ.தி.மு.க. என்று மாறி மாறி வென்ற காலம் மாறும்.

புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும். ஒரு மகத்தான மாற்றம் உருவாகும் என்றார். (அ-2)

## நாளை முதல் ஒருமாத காலம் வரை கடலுக்குள் செல்வதில்லை

### தமிழக மீனவர்கள் தீர்மானம்

இலங்கை மீனவர்கள் கேட்டுக் கொண்டதை அடுத்து, நாளை முதல மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரை கடலுக்கு செல்லக்கூடாது என தமிழக மீனவர்கள் தீர்மானம் நிறை வேற்றியுள்ளனர்.

புதுக்கோட்டை,ஜெகதாப்பட்டினத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 6 மாவட்ட மீனவப் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

தடை செய்யப்பட்ட இரட்டை மடி, சுருக்குமடி வலைகளை பயன்படுத்தக் கூடாது. இலங்கை மீனவர்கள் கேட்டுக்கொண்டதை அடுத்து, நாளை முதல் மார்ச் மாதம் 10ஆம் திகதி வரை 6 மாவட்ட மீனவர்களும் மீன பிடிக்க கடலுக்கு செல்லக் கூடாது.

இலங்கை மற்றும் தமிழக சிறைகளில் உள்ள மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்க இருநாட்டு அரசுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இருநாட்டு மீனவர்களிடையே பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்த மத்திய, மாநில அரசுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (அ-2)

## ஜெனீவாவில் பீரிஸ் உரையாற்றுவார்

ஜெனீவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையில் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உரையாற்றவுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் பேரவையின் பேச்சாளர் பட்டியல் வெளியாகியுள்ளது. அதில், மார்ச் 5 ஆம் திகதி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் உரை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அவரே இலங்கைக்குழுவிற்கு தலைமை தாங்கவுள்ளமை உறுதியாகியுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜெனீவா தொடர் மார்ச் மாதம் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. மார்ச்மாதம் 3ஆம்திகதியன்று பிரித்தானியாவின் வெளியுறவு செயலாளர் வில்லியம் ஹேக், கனேடிய வெளியுறவு அமைச்சர் ஜோன் பேர்ட் ஆகியோர் முதல் நாள் அமர்வின் போது பேசவுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# “இந்த தமிழ் மண்ணுலதான் என்ட உயிர் போகனும்...!”

## -முதன்முறையாக மனம் திறக்கிறார் முருகனின் தாயார்



...அன்னைக்கு பார்த்து நிறைய பேருக்கு சமைச்சு வச்சி, நிறைய முட்டைய எல்லாம் வாங்கி சமைச்சு வச்சிருந்தோம். கடைசியா பார்த்தா எல்லாருக்கும் தூக்கு தண்டனைன்னு சொல்லிட்டாவ. சத்தம்போட்டு அழமுடியல. இங்க வாடக வீட்டுல இருக்கினம். நான்தான் முருகனின் அம்மான்டு யாருக்கும் தெரிய இல்ல. அப்படி ஒரு பிரச்சினை ஆனபடியால் சத்தம்போட்டு அழமுடிய இல்ல. குழந்தை அரித்திராவுக்கு ஏன் அழறோமெண்டு தெரியல. ஆனா அவளும் அழுதவ. அதை என்னென்டு சொல்றது.

**“சரி. உங்கள் மகன் முருகனை சந்திக்கும்போதெல்லாம் என்ன உணர்வீர்கள்? பட்ட கஷ்டமெல்லாம் எப்படி?**

ஓம் மப்பா. அந்த கதையெண்டு போனால் பொழுது விடியாதப்பா. என்ட மகனை பார்க்கனுமெண்டு போக வழித் தெரியாம போய் எங்கெங்கோ அலைஞ்சிருக்கேன். ஜெயில் வாசலிலேயே ரெண்டு மூன்று நாள் படுத்துக்கிடப்பேன். அப்பவும் அனுமதி கிடைக்காது. பிறகுதான் பார்க்க விடுவாங்கள். ஒவ்வொரு தடவையும் பார்க்கும் போதும், வெளிய வரும்போதும் என்ட புள்ள உயிரோட வருவானா. கிடைப்பானா என்டுதான் வருத்தமா இருக்கும். இங்க போகாத கோயில் இல்ல. வேண்டாத சாமி இல்ல.

கடைசியா ஒரு ஆசைய வளத்துக்கிட்டன். என்னோட உயிர் எங்கேயும் போகக்கூடாது. இலங்கையிலும் சரி, லண்டனிலும் சரி. எங்கயும் போகக்கூடாது. இந்த மண்ணுலதான் உயிர் போகனும். ஏனெண்டால் அப்பதான் என் மகன் முருகன் வந்து எனக்கு இறுதி கிரியை செய்ய ஏலும். மத்த இடமெண்டால் முடியாது. என்னோட மத்த பிள்ளைங்க எல்லாம் எங்கிருந்தாலும் இங்க வந்துடுவா இல்ல. முருகனால அப்படி வெளியில எங்கும் வர முடியாதில்ல. அதனால் என் உயிர் இங்கதான் இந்தியாவுக்குள்ள போகனுமெணடு வேண்டிகிட்டன். வேற என்ன செய்ய முடியும்.

**உங்கள் மருமகள் நளினியை சந்திக்கும்போது என்ன பேசுவீர்கள்?**

‘அய்யோ... என்னப்பா கேட்டியல. அவ என்ட மவளப்பா.. கொள்ளை ஆசை வச்சிருப்பா. ஒவ்வொரு முறையும் நளினிதான் எனக்கு ஆறுதல் சொல்லுவா. இப்போ பார்த்தபோதும் அப்படித்தான். ஒன்டும் கவலைபடாதியள். கெட்டது ஏதும் நடக்காது என்று நம்பிக்கை சொன்னவ. என்ன இருந்தாலும் மருமகளோட மனசுல என்ன இருக்குமெண்டு தெரியாதா?.. ஒன்பது பிள்ளைய பெற்றவளாயிற்றே. தான் பெற்ற குழந்தைய பார்க்க முடியேல. மடியில கிடத்தி கொஞ்ச முடியலெண்டு எவ்வளவு சுமை இருக்கும் நளினிகிட்ட. சொல்லி மாளாதுப்பா.

இந்தமுறை சந்திச்சப்போ மகள் அரித்திராவோட போட்டோவ எடுத்து வந்தீர்களா என்டு கேட்டா. நான் வழக்கம்போல இல்லேம்மா. அதுல நிறைய பிரச்சினை இருக்கு. அவளோட படம் எப்படியாகிலும் வெளியில வந்தா பிள்ளையோட படிப்பு போயிடும். அவ மனமும் வருத்தமாயிடுமெண்டு சமாதானம் சொன்னன். அந்த வலைகம்பியிலேயே தலைய அடிச்சிக்கிட்டு நளினி அழுதவா. நான் என்ன செய்ய முடியும். நளினி ரொம்பவும் அழுதவ.

**இப்போது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள். இன்றைய நிலையில் எப்படியான பிரச்சினைகளை எதிர்கொண்டு நிற்கிறீர்கள்?**

ஒரு பிரச்சினையுமில்லேப்பா. ரொம்பவும் கஷ்டப்பட்டுதான் கிடந்தோம். இப்போ அந்த கஷ்டம் குறைஞ்சிருக்கு. முருகனுக்கு அடுத்தவர் சுவிஸ்லாண்டுக்கு போனவ. அப்படியே ஒவ்வொருத்தரா ஏழு பிள்ளைகளையும் வெளிநாட்டுக்கு கூப்பிட்டவர். கடுமையான உழைப்பு. அந்த குளிரில் நேரம் காலம் பார்க்காம உழச்சவ. இப்போ பரவாயில்ல. எல்லோருக்கும் கல்யாணம் ஆயிடுச்சு. முருகனோட அப்பா, நான், அரித்திரா எல்லாம் ஒரு வீட்ல இருந்தோம். எங்கட மனஷன் (கணவர்) அந்த குளிரில் இருக்க முடியேல. கடைசி காலத்தில நான் என்னோட மண்ணுலேயே கிடந்து போறன் என்டு இத்தாவில். “பளைக்கு” கிளம்பிட்டவ. அங்க எங்கட குடும்ப முருகன் கோயில் இருக்கு. பூசாரியா இருந்துகிட்டு அங்கேயே தங்கியிருக்கிறவர். நான் வருஷம் ஒருகா வந்து என்ட மனுஷனையும் இங்க முருகனையும் பார்த்துட்டு லண்டன் போவன். நாங்க யாருமே அவரோட இல்ல. சொந்தகாரங்கதான் துணையா இருக்கிறாங்க.

**கடைசியா இப்போது 2011 ஆம் ஆண்டு மூன்று பேரின் கருணை மனு நிராகரிக்கப்பட்ட போது. தூக்குத் தண்டனைகான நாள் குறிக்கப்பட்டபோது....?**

(கண்கள் கலங்கி குரல் தழுதழுக்கிறது.) என்னவெண்டு சொல்ல. அப்போ நாங்க எல்லாரும் லண்டனில்தான் நிற்கிறம். உடனே வந்துபோக விசா கிடைக்க இல்ல. நானும் என்னோட மனுஷனும், அரித்திராவும் லண்டனுக்கு வெளியே ஒரு ஊரில் இருந்தம். லண்டனுக்குள் ரயிலில் வர பதிமூன்று மணி நேரமாகும். எங்க ஏழுபேர் பிள்ளைகளோட கவலையும் கூடிப்போச்சு. பத்து பதினைஞ்சு நாள் யாரும் யார் வீட்லேயும் சமைக்க இல்ல. சாப்பிட இல்ல.





நாங்க இருக்கிற பகுதியில எந்த கோயிலும் இல்ல. லண்டனுக்குள்ளாதான் ஒரு பெருமாள் கோயில் இருக்கு. நாங்க மூன்று பேரும் புறப்பட்டு அங்க போயிட்டோம். இரவில் உறவுக்காரங்க வீட்டில் இருப்போம். பகல் முழுக்க அந்த கோயிலில் கிடப்போம். சாமிதான் துணை. சாமிதான் விடிவென்டு வேண்டிக்கொண்டு கிடப்போம். ...ஏ... யப்பா... அந்த காலத்த என்னவெண்டு சொல்ல. ஒரு நாளா, ரெண்டு மாதமா. 23 வருஷமப்பா.. நான் அழுத கண்ணீரு ஆற்றை நிரப்பியிருக்குமே.

என்னெண்டு சொல்ல.. அங்கால இலங்கை நாட்டிலும் நிக்க முடிய இல்ல. இங்கால வெளி தேசத்திலயும் நிக்க முடிய இல்ல. இங்க வந்து நிக்கலாமென்டால் அதுவுமில்ல. அங்கொரு பிள்ளை, இங்கொரு பிள்ளையெண்டு ஓடி ஓடி நான் பட்ட கஷ்டம் அந்த சாமிக்குதான் தெரியும். அழுதழுது கண்ணே போயிடுச்சு. லண்டன் பெருமாள் கோயில்ல கிடந்தப்போ பேத்தி அரித்திராதான் எனக்கு ஆறுதல் சொன்னவ. அழவே மாட்டா. தைரியமா நிப்பா. ஆனா பட்டுன்னு காணாம போயிடுவா.. பார்த்தா கோயிலில் ஒரு பக்கமா இருந்து வருவா.

கண்ணுல்லாம் சிவந்து போயிருக்கும். வீங்கியிருக்கும். மனசுதீர தனியா அழுதுட்டு முகத்தை கழுவி வந்து நிக்கிறா என்டு தெரியும். என்னவெண்டு கேட்க ஏலும். அந்த பிள்ளையோட நிலமைய நினைச்சு பார்க்க ஏலல.. மனசு உடைஞ்சு போவேன்.

**உங்களுக்கென்று ஒரு விருப்பம், அதாவது ஆசை இருக்குமல்லையா. என்ன மாதிரியான விருப்பத்தை வைத்திருக்கிறீர்கள். நினைக்கிறீர்கள்.?**

எனக்கொரு நம்பிக்கை இருக்கு அய்யா. என்ட புள்ளைங்க அறிவு, சாந்தன், முருகன் மூன்று பேருக்கும் நல்லது நடக்கும். மூன்று பேரோட தூக்கு தண்டனையும் ரத்தாகும். சோனியா அம்மா, முதல்வர் அம்மா. மற்ற தலைவர் ஐயாக்கள், இந்த நீதிமன்றம் எல்லாம் மனசு வைக்கும் என்டு நம்பியிருக்கேன். வெளியில வந்திடுவாங்க. அப்போ எனக்கொரு ஆசை பாக்கியிருக்கு.. என்ட மத்த பிள்ளைகளுக்கு எல்லாம் நல்லபடியா கல்யாணம் செய்து வச்சிருக்கோம். யாருக்கும் எந்த குறையும் வைக்கல. அதனால நளினிக்கும் முருகனுகக்கும்... கோயில்ல வச்சி முறையா எல்லாரையும் அழைச்சு.. அவங்களுக்காக எவ்வளவோ பேரு. இங்க இந்த மண்ணுல கஷ்டப்பட்டிருக்காங்க. பாடுபட்டிருக்காங்க. அப்படி எல்லாரையும் அழைச்சு ஒரு கல்யாணத்தை செய்து வச்சிடனும். அது ஒரு குறையா இருக்கு. பிறகு கண்ண மூடினேன் என்டாலும் பரவாயில்லய்யா..

**இங்குள்ளவர்களுக்கு கடைசியா என்ன சொல்ல வருகிறீர்கள்? என்ன கருத்தை வைத்திருக்கிறீர்கள்?**

நான் என்னய்யா சொல்ல முடியும். காஞ்சிபுரம் போய் செங்கொடியோட இடத்தை பார்த்து கும்பிட்டு வந்திருக்கேன். லண்டனில் இருந்து மற்ற பிள்ளைகள் வந்தாலும் அங்க போய் கும்பிட்டுதான் திரும்புவார்கள். எங்கள் வீட்டு பூசை அறையில், எங்களின் குலதெய்வமாக செங்கொடியின் படமும் இருக்கு. இந்த இடத்தில எத்தனை பேர் இப்படி தியாகம் செய்து அவர்களுக்காக பாடுபட்டிருக்கினம். எத்தனை பேர் சிறைபட்டிருக்கினம். எத்தனை பேர் கொடுமைய சந்திச்சிருக்கினம். ஓ...ப்பா....(கண்கள் கலங்கி நிற்கிறது) யாரை மறக்க முடியும். யாரை விடமுடியும். அத்தனை பேரையும் நான் மனசால கும்பிட்டுகிட்டுதானய்யா இருக்கேன்.

முற்றும்

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணியில் சாதனை படைக்கும் 01 முதலாம் எண்காரர்களின் குணாதிசயங்கள்

1,10,19,28 போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

இந்த எண்காரர்கள் கொஞ்சம் பேராசை மிகுந்தவர்களாக இருப்பார்கள். அதிலும் 28 ஆம் திகதி பிறந்தவர்களுக்கு அந்த ஆசை கொஞ்சம் அதிகமாக இருக்கும்.

சிட்டுக்குருவிக்கு என்ன கட்டுப்பாடு என்பதைப் போல் இந்த எண்காரர்களுக்கும் கட்டுப்பாடு என்பது பிடிக்காத ஒரு விடயம். எல்லோரிடத்திலும் சிரித்துச் சிரித்துப் பேசுவதனால் அடுத்தவர்களை இவர்கள் எளிதில் கவர்ந்து விடுவார்கள். இவர்களிடத்தில் நகைச்சுவை உணர்வு அதிகம் இருப்பதால் இவர்கள் இருக்கும் இடத்தில் சிரிப்புக்கு பஞ்சமே இருக்காது.

இந்த எண்காரர்கள் ஒருவர் மீது பிரியம் வைத்துவிட்டால் அவர்களுக்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள். அதேநேரம் இவர்கள் கொஞ்சம் கஞ்சத்தனம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் இளகிய மனம் படைத்தவர்களாக இருந்தாலும் தங்களிடம் பகைத்துக் கொண்டவர்களிடம் மண்டியிட போகமாட்டார்கள். இதனால் இவர்களுக்கு வெளியில் தெரியாத எதிரிகள் இருந்தாலும் அதனால் இவர்களுக்கு ஆபத்து எதுவும் ஏற்படாது.

ஆண்களாக இருந்தாலும் சரி பெண்களாக இருந்தாலும் சரி இவர்களிடம் எளிதில் மயங்கி விடுவார்கள். அதேபோல் இவர்களும் எவ்வளவு பெரிய அறிவாளிகளாக இருந்தாலும் அவர்களை வசியப்படுத்த தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் இவர்கள் கைதேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

இந்த எண் காரியங்களைப் பற்றி முக்கிய ஒரு விடயம் என்னவென்றால் இவர்களில் சிலருக்கு குழந்தை பாக்கியம் இருக்காது. அப்படியும் இல்லையென்றால் ஆண் வாரிசு இருக்காது. அப்படியே இருந்தாலும் அந்தப் பிள்ளைகளால் இவர்களுக்கு எந்த விதமான பலனும் இருக்காது.

இந்த எண்காரர்களைப் பொறுத்தவரை இவர்கள் என்னதான் வசதியோடு வாழ்ந்தாலும் இவர்களின் வாழ்வில் ஏதாவது ஒரு குறை இருந்து கொண்டே தான் இருக்கும். இந்த எண்காரர்கள் எல்லோரிடத்திலும் இருக்கும் தவிர்க்க முடியாத ஒரு குறைபாடு இதுவாகும்.

இவர்களுக்கு திடீர் திடீர் என்று கடுமையான கோபம் வருவதால் இவர்களுக்கு வர இருக்கின்ற நல்ல வாய்ப்புக்களை இழந்து விடுவார்கள். இதைத் தவிர்த்துக் கொண்டால் இவர்கள் வாழ்வில் நல்ல நிலைக்கு வருவார்கள்.

இவர்கள் மிகவும் நேர்மையானவர்களாக இருப்பார்கள் . குறுக்கு வழியில் போவது என்பது இவர்களுக்குப் பிடிக்காது. அதேபோல் இவர்களை எவரும் அடிபணிய வைக்க முடியாது அதேநேரம் இவர்களுக்கு தலைக்கணம் கொஞ்சம் அதிகமாக இருக்கும்.

காதல் துறையில் அநேகமாக இவர்கள் வெற்றி நடை போடுகிறவர்களாகவே இருப்பார்கள். காதலித்த ஆணையோ அல்லது பெண்ணையோ திருமணம் செய்து கொள்வார்கள். அப்படியும் இல்லையென்றால் எண்கள் பகை இல்லாமல் இருந்தால் திருமணம் செய்து கொண்டவரோடு பிரியமாக இருப்பார்கள்.

விதி எண் சக்திமிக்கதாக இருந்தால் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். இல்லையென்றால் தடம்புரண்டு செல்லும். இவர்களுக்கு இரக்க குணம் அதிகம் என்பதனால் விரைவிலேயே உணர்ச்சி வசப்பட்டு விடுவார்கள்.

இந்த எண்காரர்களில் சிலர் சந்தர்ப்பவாதிகளாகவும் இருப்பார்கள். அந்தந்த சந்தர்ப்பங்களில் யாருடன் சேர்ந்து கொண்டால் தங்கள் வண்டி ஓடும் என்பதைப் புரிந்து கொண்டு கட்சியை மாற்றிக் கொள்வதில் இவர்களுக்கு நிகர் இவர்கள் தான். வெளிப்படையாகவே சொல்வதாக இருந்தால் ''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்''வதில் அசகாயசூரர்கள்.யார் பக்கத்தில் இவர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கு வக்காலத்து வாங்கித்தான் இவர்கள் பேசுவார்கள்.

பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள் எல்லோரும் அநேகமாக இந்த எண்காரர்கள்தான் இருப்பார்கள். அதேபோல், அடுத்தவர்களை புகழ்ந்து பேசி தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ளும் கலையில் இவர்களை எவரும் மிஞ்ச முடியாது. 19,28, 37, 55 போன்ற வயதுகளில் இவர்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படும்.

இவர்களிடம் இருக்கும் சில நல்ல பண்புகளினால் நிறையப் பேர் இவர்களைத் தேடி வருவார்கள். இதனால் இவர்களுக்கே நிறைய நண்பர்கள் இருப்பார்கள்.

அதிக கௌரவம் பார்க்கும் இவர்கள் எந்தப் பெரிய பதவிகளில் இருந்தாலும் தனது மேலதிகாரி கௌரவக் குறைவாக நடத்துகிறார் என்று உணர்ந்தால் அந்தப் பதவியை உடனே தூக்கி எறிந்து விட்டுப் போய் விடுவார்கள். சிலருக்கு பள்ளிப்படிப்பு அதிகம் இல்லா விட்டாலும் அனுபவ அறிவைக் கொண்டு எல்லோரையும் மிஞ்சும் அளவுக்கு செயற்படுவார்கள்.

இந்த எண்காரர்கள், கலைஞர்கள், வைத்தியர்கள், கவிஞர்கள், அரசியல் வாதிகள், வியாபாரிகள் போன்ற பல விதமான தொழில்களிலும் சிறந்து விளங்குவார்கள். இவர்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடக்க வேண்டும். விதி எண்ணில் 4 ஆம் எண்ணோ 6 ஆம் எண்ணோ பிறந்த திகதியில் ஒரே எண்கள்இரண்டோ இருந்தால் முப்பது வயதிற்குப் பிறகுதான் திருமணம் நடக்கும்.

இந்த எண்காரர்கள் தனிமையில் இருப்பது என்பது அபூர்வ மாகத்தான் இருக்கும். இவர்களைச் சுற்றி எப்போதுமே ஒரு கூட்டம் இருக்கும்.

எதையும் சுற்றிவளைத்து பேசுவது என்பது இவர்களிடம் இருக்காது. நேரடியாகவே பேசிவிடுவார்கள். அது புரியும்படியும் இருக்கும்.




இந்த எண்காரர்கள் 1 ஆம் எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. அதேபோல் இவர்களுக்கு ஜென்மப் பகையான 7 ஆம் எண்காரர்களையும் திருமணம் செய்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவர்கள் திருமணம் செய்து கொள்வதற்கு சிறந்த எண் 3, அடுத்த படியாக 4,8,5 போன்ற எண்காரர்களும் ஒத்துப் போவார்கள்.

பிறப்பு எண் 1, விதி எண்ணும் 1 என்று இருந்தால் 1 ஆம் எண்ணில் இவர்கள் பெயர் வைத்துக் கொள்ளவே கூடாது. பிறப்பு எண், வளர்ப்பு எண், பொறுப்பு எண், விதி எண்ணுக்கு பகை இல்லாத எண்ணில் பெயர் அமைத்துக் கொள்வதுதான் சிறப்பு.

பெயர் எண், விதி எண்ணுக்கு ஏற்ற விதத்தில் நிறங்களையும் அதிர்ஷ்ட கல்லையும் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

1,10,28,19 போன்ற திகதிகளில் பிறந்தவர்களுக்கும் சேர்த்தே இங்கு பலன் சொல்லப்பட்டிருக்கிறது. இது பெண்களுக்கும் பொருத்தமாகவே இருக்கும்.

19 ஆம் திகதி பிறந்தவர்கள் காதல் விவகாரங்களில் அதிக ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பார்கள். மன்மத ராஜாக்களும் மன்மதராணிகளும் இந்தத் திகதியில் பிறந்தவர்கள்தான். 28 ஆம் திகதி பிறந்தவர்களின் வாழ்க்கை மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இருக்கும். எதிர்பாராத பிரச்சினைகளுக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டிவரும். 1 ஆம் எண்கா ரர்கள் எதிலுமே NUMBER ONE ஆக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். எவரிடமும் அடிமையாக வேலை செய்ய விரும்பமாட்டார்கள். 10 ஆம் திகதி பிறந்தவர்களுக்கு வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வரும். சில சமயங்களில் இவர்களுக்கு கிடைக்க வேண்டிய வெற்றிகள் பிறருக்குப் போய்ச் சேர்ந்து விடும்.

10 காரியங்கள் நடந்தால் அதில் 4 காரியங்கள் பிறருக்குத் தான் பயன் பெறும்.

## ஜனாதிபதி மஹிந்த மியன்மாருக்கு பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அடுத்த மாத முற்பகுதியில் மியன்மாருக்கு அதிகாரபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அடுத்தமாதம் 10ஆம் திகதி லண்டனில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நிகழ்வுகளில் பங்கேற்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பிரித்தானியா செல்லத் திட்டமிட்டுள்ளார்.

இந்தப் பயணத்துக்கு முன்னதாக, அவர் மியன்மாருக்கான பயணத்தை மேற்கொள்வார் என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், மியன்மார் அங்கம் வகிக்காததால், இந்தப் பயணம் ஜெனீவா தீர்மானத்துக்கு எதிராக ஆதரவு திரட்டும் நோக்கம் கொண்டதல்ல என்றும் கூறப்படுகிறது.(அ-2)

## 2 அமைச்சர்களை விவாதிக்க அழைக்கின்றார் கிரியெல்ல

இலங்கையின் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ் மற்றும் மஹிந்த சமரசிங்க ஆகியோரை விவாதத்துக்கு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல சவால் விடுத்துள்ளார்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பிலேயே இந்த விவாதம் கோரப்பட்டுள்ளது. ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனினும் இலங்கை அரசாங்கம் அதனை நாட்டுக்கு எதிரான நடவடிக்கை என்று மக்கள் முன் காட்டுகிறது. இது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயம் அல்ல.

அமைச்சர் பீரிஸ் இலங்கையில் உள்ள காட்டுப் பிரதேசங்களில் சென்று வெளிநாட்டுக் கொள்கையை பற்றி பேசுகிறார். உரிய நாடுகளில் அவரால் இலங்கை தொடர்பில் பேசமுடியவில்லை.

இந்நிலையில் அவரும் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் தம்முடன் தொலைக்காட்சி விவாதத்துக்கு வருமாறு லக்ஸ்மன் கிரியெல்ல சவால் விடுத்துள்ளார். இந்த சவால் முன்னர் விடுக்கப்பட்டபோதும் இரண்டு அமைச்சர் களும் அதற்கு இன்னும் பதில் வழங்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## மக்களுக்கு உணவு உண்ணவே வழியில்லை- சரத் பொன்சேகா

(கொழும்பு)

நாட்டில் வாழும் மக்கள் தற்பொழுது மூன்றுவேளை உணவை சாப்பிட வழியில்லாமல் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொட பிரதேசத்தில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் கடந்த வருடத்தில் 42 ஆயிரம் ரூபாவை வரிப் பணமாக செலுத்தியுள்ளனர். ஆனால் எட்டு வருடங்களுக்கு முன்னர் வருடாந்தம் மக்கள் 15 ஆயிரம் ரூபாவையே வரியாக செலுத்தி வந்தனர்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலத்தில் இருந்து மக்களிடம் இருந்து பெருமளவில் வரி அறவிடப்படுகிறது. சகல பொருட்களுக்கு வரி அறவிப்படுகிறது.

இந்த நிலையில், மக்கள் மூனறு வேளை உணவை சாப்பிட முடியாது பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மக்களின் துயரத்தை அறியாதிருக்கும் அரசியல்வாதிகள் இருக்க நாடு எப்படி ஆசியாவின் அதிசயமாக மாறும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (அ)

## இராணுவத் தளபதியின் பதவிக்காலம் நீடிப்பு

இலங்கையின் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் தயா ரட்நாயக்கவின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இலங்கையின் இராணுவத் தளபதியாக பொறுப் பேற்றுள்ள லெப்.ஜெனரல் தயா ரட்நாயக்கவின் சேவைக்காலம் இம் மாத இறுதியுடன் முடிவடையவுள்ளது. இந்நிலையில் அவரது பதவிக்காலம் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி வரை அதாவது ஒரு வருட காலத் திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மாவட்ட பொலிஸாரும் மோட்டார் திணைக்களத்தினரும் மாணவர்களும் இணைந்து சாரதிகளுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை ஒட்டும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த போது... (படம்: பூந்தோட்டச் செய்தியாளர்)

# கசிப்பு வைத்திருந்த நபருக்கு அபராதமும் தண்டனையும்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பகுதியில் 5 ஆவது தடவையாகவும் கசிப்பு வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 6 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

சம்பவதினம் குறித்த நபர் 750 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த நிலையில் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் குறித்த நபர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் பொலிஸாரினால் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர் மூன்று தடவைகளுக்கு மேலாக கசிப்பு பாவனையில் ஈடுபட்டு வந்தமையினால் 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் சமுதாய சீர்திருத்தத்திற்குட்பட்டும் திருந்தவில்லையென்பதனால் 6 மாத கால கடூழிய சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளார். (அ-9)

## குரங்குகளின் தொல்லை அதிகரிப்பு

(கண்டாவளை)

தர்மபுரம் கிழக்கு பெரியகுளம் கிராம சேவையாளர் பிரிவில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தர்மபுரம் கிழக்கு, பெரியகுளம் கம்மடு நகர்,கட்டைக்காடு ஆகிய கிராமங்களிலே இவற்றின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது.

விவசாய காணிகளுக்குள் புகுந்து பயிர்ச்செய்கைகளை சேதமாக்குவதோடு, பயன்தரும் பழமரங்கள், தென்னையின் குரும்பை ஆகியன வற்றையும் பிடுங்கி எறிந்து நாசமாக்குவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது மாத்திரமின்றி வீடுகளுக்குள் புகுந்தும் நாசகார வேலைகளைச் செய்வதோடு சிறுவர்களை கடித்து காயப்படுத்திய சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

எனவே, குரங்குகளின் தொல்லைகளைக் குறைக்க வழிவகுக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-263)

## கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில், பிரதேச அபிவிருத்தியில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் பங்கு கொள்ளமுடியும். (அ-9-267)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளில் தென்பகுதி மீனவர்கள் ஈடுபடுகின்றனர்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் ஆற்றில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை வெளிமாவட்ட சிங்கள மீனவர்கள் பயன்படுத்தி வருவதாக ஏனைய கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய், சாலை, நந்திக்கடல், நாயாறு ஆகிய கடல்நீரேரிகளில் தடைசெய்யப்பட்ட வலைகள் மற்றும் தொழில் உபகரணங்களை பயன்படுத்தி மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இதனையடுத்து கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதியிலிருந்து தடை






செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அறிவித்திருந்தார்.

ஆயினும் இவ் அறிவித்தலைப் பின்பற்றாமல் தொடர்ந்த தொழில் நடவடிக்கைகளால் தடைசெய்யப்பட்ட வலைகள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இதன்பின்னர் கடற்றொழிலாளர் நீரியல்வளத் துறைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் கடல் நீரேரிகளில் பயன்படுத்தக்கூடிய தொழில் வலைகள், உபகரணங்கள் பற்றிய அறிக்கை மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் துறைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதனை கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, புல்மோட்டை ஆகிய பிரதேச மக்கள் கடைப்பிடித்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கொக்கிளாய் முகத்துவாரத்திலுள்ள வெளிமாவட்ட சிங்கள மீனவர்கள் கொக்கிளாய் ஆற்றில் தடைசெய்யப்பட்ட தொழில் உபகரணமான இயந்திரம் வெளி இணைப்பு செய்யப்பட்ட படகை சுமார் ஒரு வாரமாக பயன்படுத்தி வருவதாக ஏனைய கடற்றொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவ்வாறாக சட்டத்திற்கு முரணாக தொடர்ந்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் மீனவர்களின் செயற்பாடுகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு முல்லை. மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் துறை திணைக்களத்திடம் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

# வாடிவீட்டு உரிமையாளர் மீது கத்தி வீசி தாக்குதல்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தின் வாடி வீட்டின் உரிமையாளர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சம்பவதினம் குறித்த உரிமையாளர் வவுனியா நகர்ப்பகுதியிலுள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை, இவரது வீட்டிற்கு முன்னால் வாகனத்தை நிறுத்தி வைத்துக் கொண்டு நின்றவர்கள் உரிமையாளரின் மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளனர்.

இதனையடுத்து வாகனத்தால் மோதியவர்களை ஏன் மோதினீர்கள் என வினவிய போது, வாகனத்திலிருந்த இருவர் திடீரென பாய்ந்து கத்தியால் வெட்டியதோடு, தடியாலும் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் படுகாயமடைந்த மாரிமுத்து கதிர்காமராசா (வயது 50) என்பவர் வவுனியா பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரி வில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-250)

# தமிழர் பிரதேச இழப்புக் குறித்து சரியான புள்ளிவிபரங்கள் இல்லை

## வடமாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகன்

(குருமன்காடு)

புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவுக்குப் பின்னரான காலப்பகுதியில் நடைபெற்ற இறப்புக்கள், இழப்புக்கள் தொடர்பில் இன்றுவரை சரியான புள்ளிவிபர அறிக்கைகள் இடப்படவில்லை என வடமாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினராக பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அங்கு உரை நிகழ்த்துகையில்,

தமிழர் தாயக பிரதேசங்களான வடக்கு, கிழக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னரான காலப் பகுதியில் 9 இலட்சம் சிறுவர்கள் போரால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்ததாக சர்வதேச தொண்டு நிறுவனமான யுனிசெப் தனது சுயாதீன புள்ளிவிபர தகவல் சேகரிப்பில் அறிக்கையிட்டுள்ளது.

போரினால் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடு, போசாக்கின்மை, சுகாதாரச் சீர்கேடுகள், நேரடிக்காயங்கள், கண்ணி வெடிப்புகள் போன்ற பாதிப்புகளினால் வன்னி பிராந்தியம் மற்றும் யாழ்ப்பாணத்தில் இறப்பு, பிறப்பு வீதம், ஆயிரம் பிறப்புகளுக்கு இறப்பு வீதம் 41 ஆகவும் தென்னிலங்கையில் 14 வீதமாகவும் சமநேரத்தில் இலங்கை முழுவதும் 23 வீதமாகவும் பதிவாகியிருந்தன.

இந்தப் பதிவுகளிலிருந்து சிங்கள ஆட்சியாளர்களால் எமது நிலத்தின் மீதும் தமிழ் இனத்தின் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட போர் மற்றும் வன்முறைகளினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் என்ற உண்மை புலனாவதோடு, இந்த போரால் தமிழர் தாயக பிரதேசங்களே மோசமாக சிதைக்கப்பட்டன என்பதும் தெளிவாகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவுக்குப் பின்னரான காலப்பகுதியில் நடைபெற்ற இறப்புகள், இழப்புகள் தொடர்பில் இன்றுவரை சரியான புள்ளிவிபர அறிக்கைகள் இடப்படவில்லை.

இன்னோரன்ன பல விடயங்களில் பலரும் தமக்கு சாதகமாக தமது தேவைக்கேற்ப எழுந்தமானமாக புள்ளி விபரங்களை காட்டுகின்றனர்.

தொலைத் தொடர்பு, அத்தியாவசியக் கல்வி, சத்துணவு, போக்குவரத்து , சுகாதார வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை போர் மோசமாக சீர்குலைத்திருந்ததால் இறப்பு வீதங்களின் தாக்கங்கள் அவர்கள் சொல்வதை காட்டிலும் அதிகமாக இருக்கும் என்பதே உண்மை நிலையாகும் எனத்தெரிவித்தார். (அ-9-250)

## சிகை அலங்கரிப்பாளர் சங்க பொதுக் கூட்டம்

(வவுனியா)

சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் சிறப்புப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்க பதில் தலைவர் கண்ணன் இல்லத்தில் வவுனியா, (வைரவப்புளியங்குளம்) நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் ஊழியருக்கு சீருடை வழங்கும் நிகழ்வும் சங்கத்தில் ஊழியர்களையும் இணைக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக சங்க செயலாளர் அன்ரன் இராசநாயகம் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ சேவையில் இல்லாதோர் இராணுவ சீருடை அணியமுடியாது

(கொழும்பு)

இராணுவச் சீருடையில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட முடியாதென இராணுவத் தளபதி தயாரட்னாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் இராணுவச் சீருடைகளை அணிந்து, தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவச் சேவையில் இல்லாதவர்கள் இராணுவச் சீருடை அணிய முடியாது. அது சட்டவிரோதமானது. அவ்வாறு சீருடை அணிவோரை கைது செய்ய முடியும்.

தேர்தலில் போட்டியிடும் படை அதிகாரிகள் சீருடையுடன் சுவரொட்டிகளில் தோன்ற முடியும் என்ற போதிலும், நேரடியாக சீருடை அணிந்து பிரசாரம் செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் அஜித் பிரசன்ன ஆளும் கட்சியின் சார்பில் தென் மாகாணசபைக்காக போட்டியிடுகின்றார்.

அண்மையில் இவர், இராணுவச் சீருடையில் பொலிஸாரை தாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஒழுக்கமான சமூகத்தை உருவாக்க அரசு தயார்

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

தோற்கடிக்க முடியாது என்று கூறிய விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை, இன்றைய அரசாங்கத்தினால் தோற்கடிக்க முடிந்ததாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மாலபே பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தோற்கடிக்க முடியாது என்று கூறிய கொடிய பயங்கரவாதத்தை தோற்கடித்தது போல், 4 வருடங்களில் ஆச்சரியமிக்க பௌதீக அபிவிருத்திகளை செய்யமுடிந்தது போன்று, ஒழுக்கமான குணாதிசயங்களை கொண்ட சமூகத்தை உருவாக்கும் சவாலையும் இன்றைய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள தயாராகவுள்ளது.

நாட்டின் நல்லொழுக்கம் சரியாக இல்லை என சிலர் கண்ணீர் விடுகின்றனர். அண்மைக்காலத்தில் இந்த நிலைமை ஏற்பட்டது போல் அவர்கள் கூறுகின்றனர்.

1977 ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பொருளாதார தடையின்றி நாட்டுக்குள் வந்தது போன்று நல்லவைகளும், கெடுதியானவைகளும் நாட்டிற்குள் வந்தன.

ஆனால் கெடுதியானவையே அதிகளவில் வந்தது. அப்போது வந்த கெடுதியானவைகள் இன்று அதிகளவில் தென்பட ஆரம்பித்துள்ளன. நாட்டில் யுத்தம் இல்லாத காரணத்தினால் ஏனைய சம்பவங்கள் பெரிதாக தெரிகின்றன.

கடந்த காலங்களில் நாட்டில் போர் நடந்து வந்தால், நாட்டில் நடக்கும் கெடுதியான சம்பவங்களை வெளியிட ஊடகங்களுக்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை. இதனால் நாட்டில் நடக்கும் கெட்ட சம்பவங்கள் பற்றி அன்று அதிகமாக எவரும் பேசவில்லை என்றார். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



**சின்னையா மகேசன்**

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மகேசன் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று கொழும்புத்துறையில் நடைபெறும்.



**திருமதி அந்தோனிமுத்து மேரிமற்றீனம்மா**

மண்டைதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முருங்கன் பரிகாரி கண்டலை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து மேரி மற்றீனம்மா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 4 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் தேவாலயத்தில் நடைபெற்று மண்டைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



**திருமதி சிறிகிருஷ்ணராஜா கருணாம்பிகை**

வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட சிறிகிருஷ்ணராஜா கருணாம்பிகை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமைஅன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்குஅவரது இல்லத்தில் நடைபெறும்.



**திருமதி நவரெத்தினம் இராஜேஸ்வரி**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் தலையாளியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரெத்தினம் இராஜேஸ்வரி 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று தகனம் செய்யப்படும்.



**திருமதி வல்லிபுரம் பொன்னம்மா**

புங்குடுதீவு கண்ணகிபுரம் 10 வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பொன்னம்மா 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றுபூதவுடல் புங்குடுதீவு கண்ணகிபுரம் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி தெய்வசிகாமணி பரமேஸ்வரி**

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Deuil la Barre யை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வசிகாமணி பரமேஸ்வரி 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற் பகல் ஒரு மணிக்கு le Funerarium, 95, rue marcel sembat , 93430 Villetaneuse என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் அதே இடத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**நாகமுத்து தியாகராசா**

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் இல.23/2 மெமோறியல் வீதி , மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து தியாகராசா 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# சமஷ்டிமுறையிலான அரசியலமைப்பை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ள போவதில்லை

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

சமஷ்டி முறையிலான அரசியலமைப்பை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதனை மீறி ஏற்படுத்தப்பட்டால் கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தீர்வை விரும்பவில்லை. மாறாக அழிவையே விரும்புகின்றனர் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர்மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்ற விதத்தில் சமஷ்டி முறைமையிலான அரசியலமைப்பு ஊடாகவே இந்தியாவின் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இலங்கையில் ஒற்றையாட்சியின் கீழேயே அரசியலமைப்பு உள்ளது.

எனவே சிங்கள மக்கள் இவ் சமஷ்டி முறைமையிலான அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் எதிர்ப்பார்கள்.

அத்தோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு இவ்வாறானதொரு அரசியலமைப்பை ஏற்படுத்த மக்கள் ஆணை வழங்கவில்லை. எனவே இதனை மீறி செயற்பட ஜனாதிபதியால் முடியாது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேவைக்காக வடக்கு தமிழ் மக்களுக்காக தனிப்பட்ட விதத்தில் எதனையும் செய்யமுடியாது.

இதனை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தெற்கில் மோதல்கள் வெடிக்கும் சூழ் நிலைகள் உருவாகும். 30 வருட காலம் யுத்தத்தால் பல அழிவுகளை சந்தித்தோம்.

இனி மேலும் அழிவுகள் வேண்டாம் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதேவேளை சமாதானத்தையே விரும்பினேன்.

ஆனால் இன்று ஒரு தனிக் குடும்பம் அதிகாரங்களை தன்வசம் வைத்திருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இந்தியாவில் தெரிவித்திருப்பதும், அதேபோன்று இலங்கைக்கு வந்த இந்திய அமைதிப் படையினர் முன்னாள் தளபதி ஹரிஹரன இலங்கை இராணுவ மயப்படுத்தப்பட்டு வருகிறது எனக் கூறியிருப்பதும் இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் முன்வைக்கப்படவுள்ள பிரேரணையை இலக்கு வைத்த கருத்துக்களாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தென்னாசியாவின் வயது கூடிய மூதாட்டி மரணம்

(கொழும்பு)

தென் ஆசியாவின் வயது கூடிய பெண்ணாக கருதப்படும் மாவனல்லை ஹெம்மாத்தகம பலத்கமு பிரதேசத்தைச் சேர்ந்த உக்கு அம்மா தனது 117 ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

1897 ஆம் ஆண்டு பிறந்த உக்கு அம்மாவுக்கு 7 பிள்ளைகள். அதில் 5 பிள்ளைகள் மாத்திரமே உயிர் வாழ்ந்து வருகின்றனர்.

உக்கு அம்மாவின் கணவரான பண்டியா 111 ஆவது வயதில் கடந்த சில வருடங்களுக்கு முன்பு இறந்துள்ளார்.

தற்போது அவரின் குடும்பத்தில் 98 பேர் வாழ்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி உக்கு அம்மாவின் மறைவையடுத்து அவரின் இல்லத்திற்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கணக ஹேரத் மற்றும் அதிகாரிகள் உக்கு அம்மாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். (அ-2)

# 5 மாடி கட்டடத்தில் தீ விபத்து சம்பவம்

பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள 5 மாடிக் கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. பம்பலப்பிட்டி இலக்கம் 64 டேவிட்சன் வீதியில் உள்ள ஐந்து மாடிகளைக் கொண்ட வர்த்தக கட்டடத்திலே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்தில் உயிர்ச் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யா/ஏழாலை மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வு போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மா. ஆனந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பழைய மாணவனும் ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபரு மானரி.ரி.சம்பந்தர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி ஓய்வுபெற்ற வடபிராந்திய முகாமையாளர் சி. விக்னராஜா கலந்து சிறப்பிப்பார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரித்தானியாவில் பெய்யும் கனமழையால் தேம்ஸ் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து கரையோரம் இருக்கும் கிராம மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளப்பெருக்கு தொடர்ந்து அதிகரித்து வருவதால் தேம்ஸ் நதியின் சில கரைகள் உடைந்து விட்டன. இதனால் லண்டன் அருகேயுள்ள பெர்க்ஷன்,சுர்கி ஆகிய நகரங்களுக்குள் வெள்ளம் புகுந்தது. அவை மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே அப்பகுதியில் 14 வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இதற்கிடையே வெள்ளம் பாதித்த பகுதிகளை பிரதமர் டேவிட் கமரூன், துணை பிரதமர் நிக்கிலாக் ஆகியோர் நேற்று பார்வையிட்டனர். நிவாரண பணிகளை முடுக்கி விட்டனர்.

# மோடியை சந்திக்க நான்சி விருப்பம்

நரேந்திர மோடியை சந்திக்க விருப்பம் தெரிவித்து அமெரிக்க உயர் தூதர் தூது அனுப்பியுள்ளார்.

குஜராத்தில் கடந்த 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தை காரணம் காட்டி, நரேந்திர மோடிக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்து வருகிறது.

இந்நிலையில், பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு நரேந்திர மோடி நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பா.ஜ.கவுக்கு ஆதரவு திரட்டி வருகிறார்.

இந் நிலையில்,மோடியை நேரில் சந்தித்து பேச விருப்பம் தெரிவித்து, அதற்கான அனுமதியை எதிர்பார்த்து இந்தியாவுக்கான அமெரிக்க உயர் தூதர் நான்சி பொவெல் தூது அனுப்பியுள்ளார்.

இதற்கிடையில், குஜராத் முதல் மந்திரி நரேந்திர மோடியை அமெரிக்க உயர் தூதர் நான்சி பொவெல் நாளை வியாழக்கிழமை சந்திக்கிறார் என்ற உறுதியான தகவல் நேற்று பிற்பகல் வெளியாகியுள்ளது. இந்த சந்திப்பு குஜராத்தில் உள்ள காந்தி நகரில நடைபெறலாம் எனவும் தெரிய வந்துள்ளது. (2)

# புருண்டி நிலச்சரிவில் அகப்பட்டு 60 பேர் புதைந்து மாண்டனர்



புருண்டியில் கனமழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் ஏராளமான வீடுகள் பூமிக்குள் புதைந்ததில் 60 பேர் வரை உயிரிழந்தனர்.

இச்சம்பவம் கடந்த 9 ஆம் திகதி புருண்டியின் தலைநகர் புஜீம்புராவில இடம்பெற்றது. இது தொடர்பாக தெரியவருவதாவது,

மத்திய ஆபிரிக்காவில் புருண்டி எனும் நாடு உள்ளது. இதன் தலைநகர் புஜீம்புராவில் இரவு பலத்த மழை பெய்தது.

இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஊருக்குள் மழை வெள்ளம் புகுந்ததால் பல வீடுகள் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டன. புஜீம்புராவின் புறநகர் பகுதியில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது.

அதில், ஏராளமான வீடுகள் பூமிக்குள் புதைந்தன. இந்த சம்பவத்தில் 60 பேர் உயிரிழந்தனர். தகவல் அறிந்ததும் பொலிஸாரும், இராணுவமும் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

காயம் அடைந்த நூற்றுக்கணக்கானோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே, பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. (2)

# ஆப்கானிஸ்தான் வளர்ச்சிக்கு அமெ.நிதியுதவி வழங்க முடிவு

(வோஷிங்டன்)

**ஆப்கானிஸ்தான் வளர்ச்சிக்காக 1,869 கோடி நிதியை அமெரிக்கா வழங்க முடிவு செய்துள்ளது.**



பாகிஸ்தானை ஒட்டி அமைந்திருக்கும் ஆப்கானிஸ்தான், ராஜாங்க ரீதியில் அமெரிக்காவுக்கு முக்கிய இடமாக உள்ளது. இதனால் அந்நாட்டின் வளர்ச்சிக்கு நிதியுதவி அளித்து அமெரிக்கா உதவி வருகிறது. தற்போது, அதன் வளர்ச்சிக்காக ரூ.ஆயிரத்து 869 கோடி நிதி வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இந்த நிதி, சர்வதேச வளர்ச்சி ஆணையத்தின் மூலமாக வழங்க ஏற்பாடு செய்து வருகிறது. பல கட்டங்களாக இந்த நிதி ஆப்கானிஸ்தானுக்கு வழங்கப்பட உள்ளதாக அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -

இவ்வாண்டின் இறுதியில் உலக வர்த்தக அமைப்பில் ஆப்கானிஸ்தான் இணைகிறது. இந் நிலையில், நிதி நெருக்கடியை சமாளிக்கும் பொருட்டு அந்நாட்டுக்கு முதலகட்டமாக ரூ479 கோடி ரூபாவை அமெரிக்கா வழங்குகிறது. உலக வர்த்தக மையத்தின் விதிமுறைகளை பின்பற்றினால் அடுத்த 5 ஆண்டுகளில் ஆப்கான் போன்ற நாடுகளின் மொத்த வளர்ச்சி 20 சதவீதத்தை எட்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மேலும், மத்திய ஆசியாவில் இந்தியா உள்ளிட்ட நாடுகளோடு வர்த்தக உறவையும் மேம்படுத்திகொள்ள ஆப்கானுக்கு வாய்ப்பு ஏற்படும் என்றும், இரண்டாவது கட்டமாக ரூ.573 கோடி ரூபா வழங்கப்படும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது. ஆப்கானின் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து கல்வி உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகள் இந்த நிதியில் மேற்கொள்ளப்பட உள்ளது. ஆப்கானில் வேளாண்மையை மேம்படுத்தவும், சுமார் 4 இலட்சம் விவசாயிகள் பயனடையும் வகையிலும், சுமார் ரூ.747 கோடி ரூபாவில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கோதுமை உள்ளிட்ட 20 பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்த திட்டம் தீட்டப்பட்டுள்ளது. -

இருதரப்பு ஒப்பந்தங்கள் நிறைவேறியதும் இந்த ஆண்டு இறுதியில் ஆப்கானில் நிறுத்தப்பட்டுள்ள 50 ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்கள் நாடு திரும்ப உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அதே நேரத்தில் 2015ஆம் ஆண்டு வரை பத்தாயிரம் வீரர்கள் ஆப்கானில் தங்கியிருந்து ஆப்கான் படைகளுக்கு பயிற்சி அளித்து விட்டு அதன பிறகே நாடு திரும்புகின்றனர். (2)

# தெலுங்கானா மீனவர் பிரச்சினைகளை வலியுறுத்தி பாராளுமன்றில் களேபரம்

## சபை நடவடிக்கை நாள் முழுவதும் ஒத்திவைப்பு

பாராளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடரின் 2 ஆவது கட்ட கூட்டம் கடந்த 5ஆம் திகதி தொடங்கியது. இறுதிக் கூட்டத்தொடர் என்பதால் தெலுங்கானா மசோதா, ஊழல் ஒழிப்பு மசோதா உட்பட பல்வேறு மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்தது.

ஆனால் தெலுங்கானா உட்பட பல்வேறு பிரச்சினைகளை வலியுறுத்தி பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால் பாராளுமன்றம் முடக்கப்பட்டது.

தெலுங்கானா, தமிழக மீனவர் பிரசசினை காரணமாக பாராளுமன்றத்தில் நேற்றும் அமளி ஏற்பட்டது. தொடர்ந்து 5 ஆவது நாளாக சபை முடங்கியது.

பாராளுமன்றம் கூடியதும் ஆந்திராவை சேர்ந்த எம்.பி.க்கள் தெலுங்கானா பிரச்சினையை கிளப்பி கோஷமிட்டனர். சபாநாயகர் இருக்கை முன்பு சென்று அவர்கள் முழக்கமிட்டனர். தமிழக எம்.பி.க்கள் தமிழக மீனவர்கள் பிரச்சினையை எழுப்பினர். பீகாரை சேர்ந்த எம்.பி.க்கள் தனி அந்தஸ்து வழங்க கோரிய போஸ்டரை வைத்து கூச்சல் போட்டனர். இதனால் கடும் அமளி ஏற்பட்டது.

இந் நிலையில் காலையில், ராஜ்யசபா தொடங்கியதும், பெரும் அமளியில், தமிழக, எம்.பி.க்கள் இறங்கினர். சபைத் தலைவர், ஹமீத் அன்சாரியுடன், கடும் வாக்குவாதத்தில் இறங்கினர்."தமிழக மீனவர்கள் பிரச்சினையை, மத்திய அரசு, அலட்சியம் செய்கிறது. எங்களது உரிமைகளுக்காக, குரல் கொடுத்தால், அதை, விதிமுறை மீறல் என்பதா? நாங்கள், எந்த தவறும் செய்யாத போது, எதற்காக, குற்றம் செய்ததாக, நோட்டீஸ் போட்டுள்ளீர்கள்" என, அவர்கள் ஆவேசமாகக் கேட்டனர்.

ஹமீத் அன்சாரி தொடர்ந்து நடத்த முயன்ற போது, அ.தி.மு.க., எம்.பி., மைத்ரேயன், அதிரடியாக, சபைத் தலைவர் முன்பிருந்த மைக்குகளை, வளைத்து உடைத்தார். இதனால், சபையில் பரபரப்பு ஏற்பட்டது.



அப்போது, திடீரென, தி.மு.க., எம்.பி., செல்வகணபதி, அலுவல் குறிப்பேடு காகிதங்களை, சுக்கு நூறாக கிழித்து, பிரதமர், மன்மோகன் சிங் வழக்கமாக அமரும் இருக்கையின் முன், வீசியெறிந்தார். அப்போது, அந்த இருக்கையில் பிரதமர் இல்லை. காலையல் "மைக்"கை உடைத்த மைத்ரேயன இம்முறை, சபைத் தலைவர் மேஜை முன் இருந்த, பேனாக்களை பிடுங்கி, வீசி எறிந்தார். களேபரங்கள் அதிகரித்ததை கண்ட, சபைத் தலைவர், சபையை நாள் முழுவதும ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

பின், நிருபர்களிடம் பேசிய மைத்ரேயன, "மீனவர்கள், தினந்தோறும் செத்துக் கொண்டிருக்கின்றனர். அது குறித்து பேச வேண்டுமென கேட்க, எங்களுக்கு உரிமை இல்லையா? குரல் கொடுத்தால், குற்றவாளிகளா? மீனவர்கள் பிரச்னைக்காக, குரல் கொடுப்பது, குற்றம் என்றால், அந்த குற்றத்தை, தொடர்ந்து செய்வோம்!" என்றார். (2)

# இந்தியா-சீனா பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

இந்திய - சீன எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எல்லைப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செயற்படுத்துவது என உறுதிசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய - சீன எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான 5ஆவது ஆலோசனைக் கூட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சீன நாட்டின் எல்லை விவகாரங்களுக்கான இயக்குநர் ஒயாங் யுடிங் தலைமையிலான குழுவினர், இந்திய வெளியுறவுத்துறை இணைச் செயலர் கௌதம் பம்பாவாலே தலைமையிலான குழுவினரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இக் கூட்டத்துக்கு பின் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "இந்திய - சீன மேற்கு எல்லைப் பகுதியில் இருநாட்டு இராணுவத்தினருக்கு இடையே நிலவி வரும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. எல்லைப் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தை முன்னேற்றப்பாதையை எட்டியுள்ளது.

இரு நாடுகளிடையேயான எல்லைப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செயற்படுத்துவது என்று உறுதி செய்யப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல்.
~ சம்பந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk


# பசுமாட்டின் காலை வெட்டும் பாதகம் கண்டு பதறோமோ?

அந்நியர் ஆட்சியில் இந்த மண்ணில் பசுவதை இடம் பெறுவதை தமிழ் அறிஞர்கள் எதிர்த்தனர்.

பசுவதையைக் கண்டித்து இந்த மண்ணில் வாழ்வதை ஒறுத்து தமிழகம் சென்றவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

இந்த நிலைமை அன்று அந்நியர் ஆட்சியில் நடந்தேறின.

ஆனால் இன்று நிலைமை வேறு. சிவபூமி எனப் போற்றப்பட்ட யாழ்ப்பாணத் திருநாட்டில் மாட்டிறைச்சி கடைகளுக்குப் பஞ்சமே இல்லை. நாங்களே மாடடித்து, ஊன் உண்டு ஏப்பம் இடும் அளவில் எங்கள் சைவப் பண்பாட்டை புதைகுழி தோண்டிப் புதைத்து விட்டோம்.

உள்ளூராட்சி அமைப்புகள் மாட்டிறைச்சிக் கடைகளை முற்றாக முடிவுறுத்த நினைத்தால், பசுவதையை ஒழிப்பது அதிகடினமான விடயமல்ல.

எனினும் உள்ளூராட்சி சபைகள் அதுபற்றிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை என்றே கூறவேண்டும்.

பௌத்த சிங்களவர்களின் வழிபாட்டில் கடலாமை முதன்மை பெறுவதால் கடலாமை பிடிப்பது கடும் தண்டனைக்குரிய குற்றமாயிற்று.

இஸ்லாமியர்களுக்கு பன்றி பகை மிருகம் என்பதால் பன்றி இறைச்சிக் கடை என்பது இந்த நாட்டில் இல்லாமல் போயிற்று.

ஆனால் இந்துக்களின் வழிபாட்டுக்குரிய பசுக்கள், இந்துக்கள் செறிந்து வாழும் மண்ணிலேயே வெட்டப்படுகின்றன. இங்குதான் இந்து சமயத்தின் பலவீனம் தெரிகின்றது.

பெற்றதாய்க்கு அடுத்தபடியாகப் பால் தரும் பசுவை தெய்வமாகப் போற்றுவதற்று இன, மொழி, சமய வேறுபாடு தேவைப்பட மாட்டாது.

இந்த உலகில் அனைத்து இன மக்களும் பசும்பாலைப் பருகுகின்றனர். உலகின் அனைத்து மக்களுக்கும் பால் கொடுப்பதால்தான் பசு உலக மாதா என்று போற்றப்படுகின்றது.

எனவே பசுவதையைத் தடுக்கும் பொருட்டு மாட்டிறைச்சிக் கடைகளை முற்றாக இல்லாதொழிக்க, முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு சர்வ மதங்களும் தங்கள் ஆதரவைத் தரும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. எனினும் அதற்கான முயற்சிகள் போதாதுள்ளன என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

மாடு வெட்டப்படுவதை தடுப்பதற்கான சட்டம் கொண்டுவரப்படாத வரையில் பசுக்கள் வெட்டப்படும் மாபாவம் இடம்பெறவே செய்யும்.

மூன்று பசுக்களின் முன்னங்கால்களை வெட்டி எறிந்து விட்டு அவற்றை உழவு இயந்திரத்தில் கடத்திச் சென்ற சம்பவம் அண்மையில் நம் சிவபூமியில் நடந்துள்ளது.

தெய்வாதீனமாக அந்தச் சம்பவம் பொலிஸாரால் பிடிபட்டதன் காரணமாக பசுக்களின் முன்னங்கால்கள் வெட்டப்பட்ட பரிதாபம் தெரியவந்தது.

இதுபோன்று எத்தனையோ பசுக்களின் கால்களை நறுக்கி விட்டு, அவற்றைக் கடத்திச் சென்று கொன்றொழித்து இறைச்சி விற்பனை நடந்திருக்கும் என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

இப்போது, கடத்திச் செல்லப்பட்ட பசுக்கள் மீட்கப்பட்டனவாயினும் அவற்றால் எழுந்து நடக்க முடியாத அளவில் முன்னங்கால்கள் வெட்டப்பட்ட கொடுமைத்தனம் நடந்தாகி விட்டது.

ஓ கடவுளே! அந்தப் பசுக்கள் செய்த பாவம் தான் என்ன? இனவாதப் போரில் கொட்டிய குண்டுகளில் எங்கள் பிள்ளைகள் கால்களை இழந்த வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கையில், சில ஈனர்கள் பசுக்களின் கால்களை வெட்டிக் காட்டுமிராண்டித்தனம் காட்டுகின்றனர்.

இத்தகையவர்களுக்கான தண்டனை கடுமையாக இல்லாவிடில், இந்தப் பாவம் எங்கள் மண்ணைப் பழி தீர்க்காமல் விடாது.

# தமிழ் பேசும் மக்களையும் என்னையும் பிரிக்க முடியாது

## தேர்தல் கூட்டத்தில் மனோ உரை

(கொழும்பு)

மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் வாழும் மனச்சாட்சியுள்ள மக்களுக்கு நான் அன்று என்ன செய்தேன் என்றும், இன்று என்ன செய்கிறேன் என்றும் தெரியும். மக்கள் நொந்துபோன காலங்களில் காணாமல்போயிருந்தவர்கள், இன்று தேரதல் காலத்தில் திடீரென சிலர் தலைநகர வீதிகளில் உலா வருகிறார்கள்.

இவர்களை முன்னாலே விட்டு பின்னாலே, இவர்களை பார்த்து மனச்சாட்சியுள்ள மக்கள் கைகொட்டி சிரிக்கிறார்கள். மனச்சாட்சியுள்ள மக்கள் சிரிப்பது இந்த வீதி உலாக்காரர்களுக்கு விளங்கவில்லை என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னணியின் கொழும்பு, கம்பஹா மாவட்ட வேட்பாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நேற்று கொழும்பு பிரைட்டன் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சிறப்புரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

என்னை அழித்து, ஒழித்து கொழும்பிலே என் குரலை நிறுத்தும்படி இன்று சிலருக்கு கட்டளை இடப்பட்டுள்ளது. அந்த கட்டளையை சிரத்தையுடன் எடுத்துகொண்டு இவர்கள் மேல்மாகாண தேர்தலில் போட்டியிடுகிறார்கள். இவர்களால் என்னை எதுவும் செய்துவிட முடியாது.

2008ல் இருந்து என்னை அழிக்க நினைத்து செயற்பட்ட ஒவ்வொருவரையும் நினைத்து பாருங்கள். அவர்கள்தான் அழிந்து போனார்கள். நான் எழுந்து நிற்கிறேன். நிர்க்கதியான மக்களுக்காக உயிரையும் துச்சமாக மதித்து நாம் போராடினோம்.

கப்பம், கடத்தல், மிரட்டல் என்று ஏகப்பட்ட துன்பங்களுக்கு முகம் கொடுத்த நூற்றுக்கணக்கான நமது வர்த்தக சகோதரர்களை நான் காப்பாற்றியுள்ளேன். இது சம்பந்தப்பட்டவர்களின் மனசாட்சிகளுக்கு தெரியும். ஆபத்துக்கு உள்ளான பெருந்தொகையானவர்களை என் சொந்த தாய்மார்களாக, சகோதரர்களாக நினைத்து நான் போராடியுள்ளேன்.

அந்த தர்மம் அன்றும், இன்றும் என் தலையை காத்து நிற்கிறது. அது இனி என்றும் என்னை காத்து நிற்கும். எனவே என்னை அழிக்க என் முதுகை நோக்கி எவராவது குத்துவாளை வீசினாலும், அது என் கழுத்தில் முத்து மாலையாகத்தான் விழும். ஆகவே துணிச்சலுடன் சென்று ஜனநாயக மக்கள் முன்னணி வேட்பாளர்களாக மக்களை சந்தியுங்கள்.

இந்த கட்சியின் வேட்பாளர்கள் என்று சொல்வதே மக்கள் மத்தியில் உங்களுக்கு மரியாதையை தரும்.



கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் வாழும் நமது மக்களை தேடி வீடு வீடாக செல்லுங்கள். எனது செய்தியை எடுத்து செல்லுங்கள் என மனோ கணேசன் தெரிவித்தார். (செ-11)

## சிறப்பு சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்புச் சொற்பொழிவு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு **மனிதனை மனிதனாக மாற்றும் மனவளக் கலை யோகா** எனும் தலைப்பில் இந்திய மனவளக் கலை முதுநிலைப் பேராசிரியர் டாக்டர் எஸ்.இலக்குமணன் இணுவில் அறிவாலயத்தில் நிகழ்த்தவுள்ளார்.

இந் நிகழ்வின் தொடக்க உரையை தெல்லிப்பழை துர்க்கா அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வன் கலாநிதி ஆறு திருமுருகன் ஆற்றுவார். (செ-2)

# வயோதிபரை தள்ளி வீழ்த்திவிட்டு மோட்டார் சைக்கிள் அபகரிப்பு

## உதவிபுரிய சென்றதால் வந்த வில்லங்கம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளில் வந்த வயோதிபரிடம் பெற்றோல் தருமாறு கோரிய இரு இளைஞர்கள், அவர் பெற்றோல் எடுக்க முற்பட்ட போது தள்ளி வீழ்த்தி விட்டு மோட்டார் சைக்கிளை சூறையாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வேளை இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வயோதிபரை கொம்பிக் குளம் காட்டுக்கும் சரசாலை வயல் வெளிப் பகுதிக்கும் இடைப்பட்ட வீதியில் நின்ற இரு இளைஞர்கள் வழி மறித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளை நிறுத்தி வயோதிபரிடம் போத்தலொன்றைக் காட்டி பெற்றோல் தருமாறு அவ் இளைஞர்கள் கேட்டுள்ளனர்.

உதவி செய்யும் நோக்குடன் குறித்த வயோதிபர் மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கி பெற்றோலை எடுக்க முற்பட்ட வேளை அவரை தள்ளி வீழ்த்தி விட்டு சுப்பர் கப் மோட்டார் சைக்கிளை சூறையாடிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து வீதியால் வந்த வேறொரு வாகனத்தில் ஏறி வயோதிபர் நெல்லியடிக்கு வந்து சேர்ந்தார். (அ-9-60)

# அறிவூட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றமும் இலங்கை பணிப்பாளர் சபை தனியார் நிறுவனமும் இணைந்து நடத்தும் சட்ட நடைமுறைகளூடாக தொழில் முயற்சியினை வெற்றிகரமாக முன்னெடுத்தல் என்பது தொடர்பான செயலமர்வு ஒன்று எதிர் வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் சுற்றுலா விடுதியில் நடைபெறவுள்ளதாக பிரதான நிறைவேற்று அதிகாரி அறிவித்துள்ளார்.

கம்பனிகளது சட்டபூர்வ தன்மைகள் மற்றும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அடிப்படை தேவைப்பாடுகள், அவற்றின் நிதி, கணக்கீடு மற்றும் வரி முறைமைகள் தொடர்பான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக மேற்படி நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஆர்வமுள்ளோர் இலக்கம் 124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்ற அலுவலகத்துடன் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு தங்களது பதிவுகளை உறுதிப்படுத்த முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 021222 6609 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பினை ஏற்படுத்தி தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## தற்பெருமை அழிவைத் தரும்



✦ மருத்துவர்கள் நோயாளிகளிடம் "எனக்கு வியாதியே இல்லை" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கும்படி அறிவுரை கூறுகின்றனர். நோயாளிகள் அப்படிச் சொல்வதனால் வியாதிகள் அகலுவதற்கான சாதகமான நிலை உண்டாகிறது. அதுபோல, இவ்வுலகில் நீ தாழ்ந்தவன் என்று எண்ணிக் கொண்டால், சீக்கிரத்தில் தாழ்ந்தவனாகவே ஆகி விடுவாய். அளவிட முடியாத அளவிற்குத் திறமை உன்னிடம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டால், அவ்வாறே திறமைகள் மிகுந்தவனாய் ஆகிவிடுவாய்.

✦ கல்லானது தண்ணீருக்குள் வருடக்கணக்கில் கிடந்தாலும் அதனுள் தண்ணீர் நுழையாது. ஆனால், களிமண் தண்ணீருக்குள் கிடந்தால் கரைந்து விடும். அதுபோல திடமான நம்பிக்கையுள்ள மனமுள்ளவர்கள், சோதனையால் தடுமாற்றம் அடைவதில்லை. நம்பிக்கை இல்லாத வருடைய மனம் சிறு காரணத்திற்கு கூட சலனமடையும்.

✦ குருவின் சக்தியின்மீது திடமான நம்பிக்கை கொண்ட ஒரு சிஷ்யன், குருவின் பெயரைச் சொல்லிக் கொண்டே ஆற்றின் மீது நடந்து போனான். இதைக் கண்ட குரு "என் பெயருக்கே இவ்வளவு மகிமை இருக்கிற தென்றால், எனக்கு எவ்வளவு சக்தி இருக்க வேண்டும். இது எனக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போய்விட்டதே என்று நினைத்தபடியே, அவரும் தண்ணீரின் மீது நடக்க ஆரம்பித்தார். ஆனால், கால் வைத்தவுடன் மூழ்கிவிட்டார். நம்பிக்கையால் அபூர்வமான காரியங்களைச் சாதிக்கலாம். ஆனால், தற்பெருமை அழிவைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹொக்கிச் சங்கத்தில் புதிய பாடசாலைகள் இணைவு

யாழ்.மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தில் மேலும் 3 புதிய பாடசாலை அணிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தில் தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட ஸ்ரீ நயினாதீவு கணேசா மகா வித்தியாலயம், வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட மானிப்பாய் சர்வதேச பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்த வரோதயா கல்லூரி ஆகிய பாடசாலைகளே புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச்சங்கத்தின் செயலாளர் பா.தர்மகுமாரன் தெரிவித்தார்.

ஏற்கனவே யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தில் உடுவில் மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, குளமங்கால் ஜி.ரி.எம்.எஸ்., வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய ஒன்பது பாடசாலைகள் அங்கம் வகிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-23)

## கழகங்களுக்கிடையிலான கபடிப்போட்டி; மைக்கல் இளைஞர் அணி சம்பியன்



கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா 2014 ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

இதன் ஒரு அங்கமான ஆண்களுக்கான கபடிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இமையாணன் மத்தி விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்றது.

5 அணிக்ள் பங்கு கொண்ட ஆண்களுக்கான கபடிப்போட்டியின் விறுவிறுப்பான இறுதி ஆட்டத்தில் மைக்கல் இளைஞர் கழக அணியும் இமையாணன் இளைஞர் கழக அணியும் மோதின.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைக் பெற்றன.

இறுதியில் 20:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் இமையாணன் இளைஞர் கழகத்தை வீழ்த்தி மைக்கல் இளைஞர் கழக அணி சம்பியன் பட்டத்தை வென்றது. (க-23)

## ஐ.பி.எல். தொடரிலிருந்து மோர்கன் விலகல்



ஏழாவது ஐ.பி.எல். ஏலம் பெங்களூரில் இன்று 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஏலத்தில் பங்கேற்கும் வீரர்கள் பட்டியலில் இங்கிலாந்தைச் சேர்ந்த இயான் மோர்கன் பெயரும் இடம்பெற்றிருந்தது.

ஆனால் திடீரென அவர் ஐ.பி.எல். போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இதை டுவிட்டரில் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

சமீபத்தில் இங்கிலாந்து வீரர் கெவின் பீட்டர்சன் அணியில் இருந்து நீக்கப்பட்டதால் ஒரு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. அந்த இடத்தைப் பிடிக்க மோர்கன் முயற்சிக்கிறார். எனவே ஐ.பி.எல். போட்டியைப் புறக்கணிக்க அவர் முடிவு செய்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். ஏலத்தில் இருந்து விலக முடிவு செய்த என் கோரிக்கையை ஏற்றதற்கு நன்றி. இந்த தொடர் சிறப்பாக நடைபெற வாழ்த்துக்கள் என மோர்கன் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு அவர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இடம்பெற்று 14 போட்டிகளில் 307 ஓட்டங்களைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் என். தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி மக்கள் வங்கி முகாமையாளர் ஏ.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தாவடி நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர் பி.இராமநாதன், யாழ். ஸ்ரீ சத்தியசாயி சேவை அமைப்புத் தலைவர் இ.சரவணபவான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

யா/குளமங்கால் றோ.க.வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வு நாளை . வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் பாடசாலை பதில் அதிபர் சி.சிவலோகநாதன் ஸ்ரீ பாஸ்கரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி றெக்னோ அடிகளார் கலந்து சிறப்பிப்பார். (அ-2)

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை அதிபர் அருட் சகோதரி மேரி லாசர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சண்முகராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக பாடசாலையின் ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி ஏ.பேர்ணாட்ஷாவும் கௌரவ விருந்தினராக பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தனும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## தலைவர் வெற்றிக்கிண்ண காற்பந்து; யூனியன்ஸ், பிறைற் ஸ்ரார் வி.க.வெற்றி



இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டிலான இலங்கை காற்பந்தாட்ட லீக் தலைவர் வெற்றிக் கிண்ணத்திற்கான வலிகாமம் லீக்கிற்குட்பட்ட காற்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான காற்பந்தாட்ட சுற்றுப்போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

விலகல் முறையிலான மேற்படி காற்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டு போட்டிகள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இதில், தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டு கழக அணி 5:0என்ற கோல் கணக்கில் அராலி ஐக்கிய விளையாட்டு கழக அணியினை வென்றது.

இரண்டாவது போட்டியில் பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டு கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் சித்தன்கேணி கலைநகர் விளையாட்டுக்கழக அணியினை வென்றது. (க-23)



யாழ். மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலையின் (ஆனைக்கோட்டை) வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வியாழக்கிழமை பிற்பகல் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் அணிநடை குழுவையும் இடைவேளை நிகழ்வையும் படங்களில் காணலாம்.(க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 59ஆக அதிகாரி...

சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரட்ண தலைமையில் 21 ஆவது தடவையாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை மீண்டும் மனித புதைகுழிதோண்டப்பட்டபோது இவை கண்டுபிடிக்கப்பட்டன.

தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்களின் எண்ணிக்கை 59 ஆக அதிகரித்துள்ளது.

ஏற்கெனவே கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூடுகளில் மேலும் 2 மனித எச்சங்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மீடகப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதுவரை 33 எச்சங்கள் மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக வைக்கப்பட்டுள்ளன.

மீண்டும் இன்று புதன்கிழமை குறித்த அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இரு பெண்கள்...

நேற்று மாலை 6.25 மணியளவில் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு இரவு 7.10 மணியளவில உயிரிழந்துள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இளம் பெண் ஒருவர் கயிற்றில் தொங்கிய நிலையில் சடலமாக மீடகப்பட்டுள்ளார்.

நவபுரம் கைதடி வடக்கினை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மேரி அற்புதமலர் (வயது 24) என்ற இளம பெண்ணே இவ்வாறு சடலமாக பொலிஸாரால் மீட்க்கபட்டுள்ளார்.

சடலமானது நேற்று மாலை 6.45 மணியளவில் பிரேத பரிசோனைக்காக யாழ்போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## பல்வேறு அனர்த்தங்...

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

இதனைவிட யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பப் பெண்ணொருவரும் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதேவேளை நேற்று பிற்பகல் உரும்பிராய் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் மாங்குளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உயிரிழந்ததோடு ஆறுபேர் படுகாயமடைந்திருந்தனர்.

இதனைவிட முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்ததோடு பெண்ணொருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு நேற்றைய தினம் 10 பேர் உயிரிழந்ததோடு 8 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## பிக்கப்-மோ...

யதில் தாய் பிள்ளையும் சம்பவத்தில் பலியாயினர்.

இச்சம்பவம் நேற்று காலை 8.30 மணியளிவில் புதுகுடியிப்பு ஏரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

புதுகுடியிருப்பு சிவில் பாதுகாப்பு பிரிவில் நடன ஆசிரியராகக் கடமையாற்றும் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தயானந்தன் சாதனா(வயது 26) அவரது மகளான தயானந்தன் யதுசிகா (வயது 3) ஆகியோரே இச் சம்பவத்தில் பலியானவர்களாவர்.

இவர்களுடன் பயணித்த கிளிநொச்சி புதுக்குடியிருப்பு கைவேலி கணேச வித்தியாலய ஆசிரியர் ராதா(வயது 52) என்பவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தை அறிந்து அவ்விடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் பலியானவர்களின் சடலங்களை மீட்டு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதுடன் விபத்தினை ஏற்படுத்திய மேற்படி பிக்கப் சாரதியினை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்தின் போது சுமார் 30 மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்ட மோட்டார்சைக்கிள் இரண்டு துண்டுகளாக உடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-215,267,85,6,2,15)

## ஹயஸ் வான்...

அதேவேளை அக் குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கோர விபத்து நேற்று அதிகாலை 2.45 மணியளவில் மாங்குளம் பகுதியில் ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் இடம்பெற்ற திருமண வீட்டுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக கொண்டிருந்தபோதே இந்த கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

**விபத்து**

கொழும்பிலுள்ள உறவினர்களின் திருமண வீட்டுக்கு கடந்த 2-ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் அங்கிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஹயஸ்வானில்நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திற்கு புறப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கிழவன்குளத்திற்கும் கொக்காவிலுக்குமிடைப்பட்ட மாங்குளம் பகுதியில் வந்து கொண்டிருந்தபோது ஏ-9 வீதியில் 230-வது மைல்கல் பகுதியில் வீதியோரமாக கல்லுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் ஹயஸ் வான் வேகமாக மோதி விபத்துக்குள்ளானது.

**ஐவர் பலி**

இந்த விபத்தில் ஹயஸ் வானில வந்து கொண்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐவர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

இதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 7 மற்றும் 4 வயதேயான சிறுமியும் சிறுவனும் பலியானதோடு வெளிநாட்டிலிருந்து வருகை தந்த குடும்பஸ்தர் உட்பட இரண்டு குடும்பஸ்தர்களும் ஒரு வயோதிபப் பெண்மணியும் பலியாகினர்.

**கோண்டாவிலைச் சேர்ந்தவர்கள**

இதில் யாழ்.கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் கோவிலடியைச் சேர்ந்த சி.சின்னமணி (வயது 73) சின்னத்துரை சிவநேசன (வயது 45) சோதிலிங்கம தீபன்(வயது 36) இவர் ஜேர்மனியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த நிலையில் உயிரிழந்தவர். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

சுஜிகரன் ஜஸ்மி (வயது 7) (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில தரம் 2-ல் கல்வி கற்றுவந்த மாணவி) சுஜிதரன்பதுமன்(வயது-4) ஆகியோரே சம்பவ இடத்திலேயே பலியாகியவர்கள்.

**ஆறுபேர் படுகாயம்**

மேற்படி விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்த அதேவேளை அதே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் உயிரிழந்த சிறுவர்களின தாயான சுஜிதரன்சுமிலா (வயது -30), சிவனேஸ்வரன் கவிதா (வயது-8), சிவலிங்கம் சிந்துனி (வயது 12), சோ.மதிபன் (வயது-36),ஜே.தயாநிதி(வயது 53), சிசுமிலா (வயது-31) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

**சாரதி நித்திரை**

இந்த கோர விபத்துக்கு காரணம் ஹயஸ் வானின் சாரதி நித்திரை கொண்டமையே எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ள அதேவேளை அவர் காயங்கள் இன்றி தப்பித்துள்ளார்.

**பொலிஸார் விசாரணை**

மேற்படி விபத்து தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருவதோடு டிப்பர் சாரதிங்ய கைது செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

இதேவேளை ஹயஸ் வாகனத்தில் சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது.(செ-2,11,6,85,15,250,266)

## வடக்கு மக்களின்...

களிடம் மேற்கண்டவாறு தாம் தெரிவித்ததாக முதலமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்தார். இந்தச் சந்திப்பு தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

***பங்கு பற்ற விருப்பம்***

இங்கு வருவதற்கு முன்பு ஆளுநருடன் பேசி விட்டுத்தான் வந்தனர். எங்களுடன்சேர்ந்துவடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் பங்கு பற்ற ஆளுநர் விருப்பம் தெரிவித்ததாகவும் எப்பேற்பட்ட அபிவிருத்தித்திட்டங்களை செய்ய வேண்டும் என்பது சம்பந்தமாகவும் கூறி யதாக ஐ.நா பிரதிநிதி என்னிடம் கூறினார்.

ஆளுநர் அவ்வாறு கூறியிருப்பாராகயிருந்தால் அதனை நாம் வரவேற்கின்றோம் என்று அவருக்கு நான் தெரிவித்திருந்தேன்.

**அரசிற்கு அக்கறையில்லை**

பாரிய செயற்றிட்டங்களிலும் பார்க்க எங்களுடைய மக்களுக்குயிருக்கும அன்றாடத் தேவைகள், பிரச்சினைகள் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரங்கள் இவை பற்றி நாம் சிந்திக்க வேண்டியிருப்பதாகவும், அதனைப்பற்றி கூடிய கரிசனை காட்டவேண்டியவர்களாகவும் உள்ளோம் ஏன் எனில் அரசாங்கத்தைப் பொறுத்த வரை அவ்வாறான எண்ணம் அவர்களுக்கு இல்லை என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

**ஒத்துழைக்கவேண்டும**

அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவும் அரசாங்கம் முன்வந்தால் நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார் அதற்கு நான் கூறினேன். அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை. எங்களுக்கு முக்கியமான தேவை என்ன வென்றால் மக்களின் நலன்தான்.யார் கொடுத்தாலும் எங்களுக்கு அதைப் பற்றி கவலையில்லை நாங்கள் ஒன்றுசேர்ந்து ஒன்றுமையாக மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதே எங்களுடைய அவாவும் ஆசையும் என்பதை எடுத்துக் கூறினேன்.

அதற்கு அவர்கள் எங்களோடு பங்கு பற்றாளர்களாகயிருந்து இதை செய்ய முன்வருவதாக கூறினார்கள். நாம் அதை வரவேற்று நிற்கின்றோம்.

ஏன் என்றால் அரசாங்கம் தற்பொழுதும் அதாவது எமது அனுபவம் என்னவென்றால் அரசு தான் தோன்றித்தனமாக என்று கூறுவதற்கு அப்பால்தான் முன்னரே நினைத்தவாறு சில விடயங்களை நடத்திக்கொண்டு போவதற்கும் எங்களை அதிலிருந்து விலக்கி விடுவதற்கும் சில நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவே எமக்கு தென்படுகின்றது, அப்பேற்பட்ட சூழ்நிலையில் தான் நாம் உள்ளோம்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை மாறி புதிய ஒரு சூழ்நிலை உருவாக்கப் படுமாகயிருந்தால் அதைநாம் வரவேற்போம் என்று கூறியதோடு ஒற்றுமையையும் உடன்பாட்டையும் ஏற்படுத்தமுடியும் விடயங்கள் தொடர்பில் பேசினோம்.

**விஜய நோக்கம்**

ஐக்கிய நாடுகள் எந்த விதத்திலே வடக்கில் கூடிய அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபடமுடியும் அதற்கு தங்களால் என்னென்ன விடயங்கள் செய்யப்படவேண்டும் என்பது குறித்து ஆராயத்தான் வந்தார். நாடளாவிய ரீதியில் ஐ.நா உதவிகளைச்செய்தாலும்முக்கியமாக வடக்கில்மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி குறித்தே ஆராய வந்தார்.

அத்தோடு தங்களால் முடியும் வரைக்கும் எங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தி அபிவிருத்தியை முன்னெடுக்க தாம் முனைவதாகவும் கூறினார்.

**பிரேரணை பற்றி பேசவில்லை**

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில அமெரிக்காவினால் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை குறித்து பேசப்பட்டதா என்று கேட்டபோது அது பற்றி எதுவும் பேசப்படவில்லை என்றார்.

மேலும் பொருளாதார ரீதியாகவும் அபிவிருத்தி பற்றியும் ஆராயத்தான் வருகைதந்தார். அரசியல் ரீதியான எந்தவிதமான பேச்சுக்களும இடம் பெறவில்லை.

**கோரிக்கை**

எங்களுடைய தேவைகள் என்ன என்பது பற்றி முதலிலே அறிய வேண்டும். தேவைகளை அறிவதில எங்கக்கு சில சிக்கல்கள் உள்ள அந்த இடையூறுகளை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா பிரதிநிதியிடம் தான் கோரிக்கை விடுத்ததாக முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# ஐ.நா பிரதிநிதி-பசில் சந்திப்பு



ஐக்கிய நாடுகளின் துணை செயலாளர் நாயகமும் அந்த அமைப்பின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஆசிய பசுபிக் பணிப்பாளருமான ஹோலியங் சூ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில்ராஜபக்ஷவை அவரது அமைச்சில் நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

இதன் போது விரிவான கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு நாள் பயணமாக கடந்த 9 ஆம் திகதி இலங்கை வந்த ஹோலியங் சூ இலங்கை அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடன் நடத்தும் சந்திப்புகளில் முதல் சந்திப்பாக இந்த சந்திப்பு நடைபெற்றது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் இலங்கையில் அடைந்துள்ள வெற்றியை புரிந்து கொள்வது, அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள், இலங்கை மேற்கொள்ளப்படும் ஐ.நாவின் எதிர்கால வேலைத் திட்டங்களுக்கான உதவியின் எதிர்கால பயணத்தை உறுதிப்படுத்துவது என்பனவே ஹோலியங் சூ இலங்கை விஜயத்தின் நோக்கமாகும். (செ-11)

# புனித தாதுவை சுமக்கும் 'ராஜா' யானை உயிரிழப்பு

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மகா எசல பெரஹெரவில் பதினைந்து வருடங்களாக புனித தந்த தாதுவை தாங்கி சென்ற வேவலதெனிய ராஜா யானை நேற்று முன்தினம் இரவு9.45 மணியளவில் உயிரிழந்துள்ளது.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மகா எசல பெரஹெரவுக்கு மிகப்பெரிய சேவை செய்த வேவலதெனிய மஹிந்தோதய விகாரைக்கு சொந்தமான ராஜா யானை இறக்கும் போது அதற்கு வயது 55 ஆகும்.

இது குறித்து மேற்படி விகாரையின நிர்வாக குழு தலைவரான சப்ரக முவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

உயிரிழந்த ராஜா யானை தென் மாகாணத்தின் அகுனு கொல பெலஸ் பிரதேசத்தில் பிடிக்கப்பட்டு 1976ஆம் ஆண்டு அப்போதைய உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சராக இருந்த பீ.பீ.ஜீ.களுகல்லவின் ஊடாக வேவலதெனிய விகாரைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

மேற்படி ராஜா யானை கேகாலை பொஸன் மகா பெரஹெர, கண்டி ஸ்ரீ தலதா மகா பெரஹெர, கங்காராம, பெல்லன்வில, களனி, இரத்தினபுரி மகா சமன் தேவாலயம், கதிர்காமம், தெஹியோவிட்ட, ரம்புக்கன, மாவனல்ல, ஹெம்மாத்தகம போன்ற மகா பெரஹெரவில் புனித சின்னத்தை தாங்கி சென்ற பிரதான ராஜா யானை இதுவாகும்.

கடந்த சில காலங்களாக வேவலதெனிய ராஜா யானை நோய்வாய்பட்ட நிலையில் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு சொந்தமான பல்லேகல பௌத்த விகாரையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.(செ-11)

## மதில் வீழ்ந்ததில்...

சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் யாழ்.பலாலி படைத் தலைமையகத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வந்த கண்டி வலப்பனை பகுதியைச் சேர்ந்த டபிள்யூ ஜே.எம். எஸ்.பண்டார (வயது - 23) என்ற இராணுவச் சிப்பாய் ஆவார்.

இவரது சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (செ-6)

## ஐரோப்பிய...

மாநாட்டில் சில விடயங்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நிலைப்பாடுகள் குறித்து இந்த மாநாட்டில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதற்கு ஆதரவளிக்கப்படும் என கலந்துரையாடல் முடிவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உலக அளவில் மனித உரிமை மேம்பாட்டுக்கு ஆதரவளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அமைப்பாக ஐரோப்பிய ஒன்றியம் செயற்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவருகிறது....! வெளிவருகிறது....!

G.C.E. A/L மாணவர்களுக்கான 2008-2013 வரையான கடந்தகால வினாவிடைகள்
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் அறிவுரைகளுக்கு ஏற்ப** தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் புள்
வழங்கல் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு விரிவான விடைகளுடன் தொகுக்கப்பட்டு
01.03.2014இல் வெளிவருகிறது.

1. உயர் கணக்கீடு - K. கலைச்செல்வன், S. மகேஸ்வரன்
2. பொருளியல் - S.ஸ்ரீராம், V. பரமேஸ்வரன்
3. வணிகக் கல்வி - P. உமாசங்கர்
4. பொது சாதாரணப் பரீட்சை - P. உமாசங்கர்
5. அளவையியலும் விஞ்ஞானமும் - A. விக்னேஸ்வரன்
6. வணிகப் புள்ளி விபரவியல் - A. விக்னேஸ்வரன்
7. பௌதிகவியல் - A. கருணாகரா
8. இரசாயனவியல் - M. எட்வேட்
9. உயிரியல் - S. ரூபசிங்கம்
10. மனைப்பொருளியல் - K. பத்மாசனி
11. சித்திரம் - A.S.சற்குணரா

பரீட்சையில் விசேட சித்திகளை பெற்றுக்கொள்ள அனைத்து மாணவர்களையும் வாழ்த்துகின்றோ

வெளியீடும் விற்பனையும் : **லங்கா புத்தகசாலை (தனியார்) வரையறுக்கப்பட்ட**
F.L. 1/14 டயஸ் பிளேஸ், குணசிங்
கொழும்பு
தொலைபேசி : 0112341
பக்ஸ் : 011 2459

(வியாபாரிகளுக்கும், மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கும் விசேட **விலைக்கழிவுகள்** வழங்கப்படும்) (5581)



## தவறவிடப்பட்டுள்ளது

சிவலிங்கம் புலேஸ்குமார் என்பவரது அடையாள அட்டை (861114481V) சாரதி அனுமதிப்பத்திரம், ATM அட்டை என்பன முல்லைத்தீவு சிலாவத்தை - உணாபுலவு- முல்லைத்தீவு நகரம் - கோயில் குடியிருப்பு - செல்வபுரம் - வட்டுவாகல் இடையில் 2ஆம் திகதியன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியிலோ அல்லது தொலைபேசி இலக்கத் துக்கோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். களபூமி, காரைநகர், தொலைபேசி : 0772205680



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532



## ஜோதிடர் வருகை

இந்தியாவின் பிரபல ஜோதிடர் C.M. சாமி (Dip. in Astrology) யாழ். வருகை. ஜாதக விளக்கங்களுடன் மலையாள மாந்தீரீக முறைப்படி தீர்வு காணல்.
தொடர்பு :
என். பாலசுப்பிரமணியம், அம்மன் வீதி, தலங்காவில் பிள்ளையார் கோயிலடி திருநெல்வேலி. Tel : 0777684406 (5573)



## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு விற்பனையாகிறது
## கணித விவேக வழிகாட்டி

ஆக்கம்: I.L.M.ஸபான் (அக்கரைப்பற்று)

ஒழுங்குபடுத்தப்பட்ட தெளிவான பாடங்களுடன் இலகுவான வசனநடையில் தொகுக்கப்பட்ட புலமைப்பரீட்சை வினாக்களையொத்த தொகுப்பு வினாக்களுடன், விடைகள் அடங்கியது.



எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
V.P.P. ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் விலை: 450/-
32, சென். அந்தனீஸ் மாவத்தை, கொழும்பு 13. தொ.பே : 077 6258778 (C-6482)



## BRITISH COLLEGE OF ENGLISH

# IELTS

BRITISH COUNCIL

IELTS Registration Centre For British Council

May - 10 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்.



**Unique Features**
* Class Work with individual attention
* Guaranteed results to achieve high band scores
* Free access to English Language Centre
* Free use of latest IELTS Materials
* Course Conducted by University Lecturers who have undergone IELTS Teacher preparation Courses at the British Council

**Course duration Commencement**

| | | |
|---|---|---|
| Saturday - Sunday | 8.30 a.m - 11.30 a.m | 10 Weeks |
| Mou - Tues - | 7.00a.m 8.30 a.m | 15.02.2014 |
| Wed - Thurs | 3.00 p.m 5.00 p.m | |

வகுப்புக்கள் - 15.02.2014 ஆரம்பம் (C-6478)

## BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக) Tel: 0778803887


## தமிழர்களுக்கு தீர்வு...

கைள் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தகவல்களையும் தரவுகளையும் அரசாங்க திணைக்களங்கள் தருவதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றன.

மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற ஒத்துழைப்பு வழங்குவது போதுமானதாக யில்லை என்று தாம் ஐ.நா. பிரதிநிதிகளிடம் கூறியதாகவும் அதற்கு அவ்வாறான தரவுகளைப் பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தனக்கு உறுதியளித்ததாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்பு இன்றி எதையும் செய்ய முடியாது என்பதை இந்த நடவடிக்கைகள் வெளிப்படுத்தி நின்றமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த முதலமைச்சர், இலங்கையைப் பொறுத்த மட்டில் தமிழர்கள் மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்பு இன்றி எந்தவொரு முன்னேற்றங்களையும் காண முடியாது. பிரச்சினைகளைத் தீர்க்க மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்று பதிலளித்தார். (செ-6)


## இப்போது சிகரம் மூலம்...
# New Zealand, Australia, Switzerland & Cyprus
நாடுகளுக்கு மிக இலகுவாகச் செல்லலாம்

* மாதம் 2500$ வருமானத்துடன் Hotel Management
* Nursing & Healthcare வேலைவாய்ப்புக்கள்
* Diploma, Bachelors & Master Degree Programs with Work Permit & PR
* பெற்றோர் / வாழ்க்கைத்துணையை அழைத்துச் செல்லலாம் (Dependant/Guardian Visa)

மேலதிக விபரங்கள்:
**15-02-2014 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சிகரம் கேட்போர் கூடத்தில்**
(கடவுச் சீட்டு, சான்றிதழ்கள், இதர ஆவணங்களுடன் நேரில் வரவும்)

முற்பதிவு அவசியம்
Call / SMS
077 36 16 798

**விசா கிடைத்ததுமே முழுமையான கட்டணம்**

*எம்மூடாக அனுமதி பெற்ற எவருக்குமே விசா அனுமதி நிராகரிக்கப்பட்டதில்லை

Sikaram - Gateway to Education & Employment
**சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி**
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
www.Sikaram.lk (C-6495)



INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the Purview of the
Ministry of Telecommunication & Information Technology
MPCS Building, 127, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax No: 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழிநுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கை நெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**FEBRUARY BATCH**
+ Dip. in Microsoft Office
+ Dip. in Desktop Publishing
+ Dip. in Information Technology
+ Dip. in Computer Programming

**ONLINE COURSE**
+ Dip. in PC Application & Office Management

**LANGUAGES**
+ VB. Net + PHP + C.Sharp + Java

**WORKSHOPS**
+ Internet & e.mail
+ Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ். பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 21.02.2014
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 22.02.2014

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
- Executive Officer - (C-4686)



Duration 1 Month
வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் பயிற்சி

## Certificate in Personality Development
## ஆளுமையை விருத்தி செய்யும் பயிற்சி நெறி

ஒரு Interviewவை எவ்வாறு எதிர் கொள்ளுவது, அதற்கு எவ்விதமான ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டும் மற்றும் அலுவலகத்திற்குத் தேவையான ஆங்கிலப் பயிற்சிகள் என்பனவற்றை உள்ளடக்கியது.

இன்று எமது பிரதேசத்தில் எத்தனையோ நிறுவனங்கள், வங்கிகள் தமது கிளைகளைத் திறந்தும் நேர்முகத்தேர்வினை முறையாக எதிர்கொள்ளாத காரணத்தினால் பல திறமைசாலிகளின் வேலைவாய்ப்பு அவர்களைவிட்டு கைநழுவியது. பல திறமைகள், பட்டங்கள், சான்றிதழ்களை வைத்து இன்றைய நவீன உலகத்திலே வேலை வாய்ப்பு கிடைத்துவிடுவதில்லை மாறாக நீங்கள் நேர்முகத் தேர்வினை சரிவர செய்வதன் மூலமே உங்களுக்கான நல்ல வேலையும் எதிர்காலமும் நிச்சயிக்கபடுகின்றது.

வேலைதேடும் பட்டதாரிகளுக்கும் எமது நிறுவனத்தில் கல்வி பயின்ற மாணவர்களிற்கும் விசேட கட்டணக்கழிவு உண்டு

BCHS
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

STARTS ON 15.02.2014 @ 10.00am
22.02.2014 @ 3.00pm

*Objectives : Facing job interviews with confidence, preparing your CV & Job applications, Spoken English for office use, Explore the variety of career options, Etc...* (C-6479)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.